# பல்லாயிரம் ரூபா நோட்டுகளுடன் 15 கார்கள் சிக்கின!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 261
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 14 ஷஃபான் 29 சனிக்கிழமை (31-10-70)

B. R. C. பெப்ரிக்
நிர். 6, 7, 8, 9
10 — 12
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
1/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

## யாழ். நகரில்திடீர் சோதனை

யாழ்ப்பாணம், சனி

**நேற்று அதிகாலை நான்கு மணியிலிருந்து காலை 7 மணிக்குள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் பதினைந்து கார்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஆயிரக்கணக்கான பழைய 50, 100 ரூபா நோட்டுகளுடன் மாட்டிக் கொண்டன.**

பதுக்கி வைத்திருந்த பணத்தை பகிர்ந்து மாற்றுவதற்காக அதிகாலையிலேயே ஆயிரக்கணக்கான 50, 100 ரூபாய் நோட்டுக்கள் காரில் எடுத்துச் செல்லப்படுவதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் பல கார்களைச் சுற்றி வளைத்துச் சோதனையிட்டனர். சுமார் 15 கார்கள் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டன.

ஒவ்வொரு காரிலும் பதினையாயிரம், பன்னீராயிரம், பத்தாயிரம், எண்ணாயிரம் பழைய 50, 100 ரூபாநோட்டுகள் இருக்கக் காணப்பட்டனவாம். பொலிஸார் முழுத்தொகையையும் அவர்களை வங்கிகளில் போடச் செய்தனர்.

### 4 வீடுகள்

### 4 கடைகள்

யாழ்ப்பாணத்தில் நான்கு கடைகள், 4பெரிய வீடுகளை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம். உதவிபொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ராஜகுரு இன்ஸ்பெக்டர்கள் விஜயரத்தினு. மாணிக்கம் ஆகியோர் கொண்ட கோஷ்டி சோதனையிட்டது.

பணம் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா என்பது

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ். வங்கியில்

## ஆயிரக்கணக்கான பெண்கள் முற்றுகை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளின்முன் நேற்றுக் காலை ஆயிரக்கணக்கான பெண்கள் 100 ரூபா 50 ரூபா நோட்டுக்கள் மாற்றுவதற்காக திரண்டு நின்றனர். பெண்களின் தொகை அதிகரித்ததைத் தொடர்ந்து பெண்களுக்கு ஒவ்வொரு வங்கிகளிலும் தனியான கியூவில் நிற்க ஒழுங்கு செய்யப்பட்டது. சுமார் 5000 பெண்கள் வங்கிகளின் முன் காத்திருந்தனர்.

நேற்று அதிகாலை 1 மணி முதலே வங்கிகளின் முன் கியூவில் நிற்க ஆரம்பித்து விட்டனர். சிலர் இரண்டாவது சினிமாப் படக்காட்சி முடிந்ததும் கியூவில் நிற்க ஆரம்பித்து விட்டனர். வங்கிகளின் முன்னால் ஆயுதம் தாங்கிய பொலிசாருடன் கடற்படையினரும் காணப்பட்டனர். சிலர் 8 மணித்தியாலமாக கியூவில் நிற்கக் காணப்பட்டனர்,

கிராமப்புறத்திலிருந்து வரும் பாமர மக்கள் பத்திரத்தை நிரப்பத் தாமதிப்பதாலேயே நேரம் செல்வதாக ஒருவர் தெரிவித்தார். அவர்களுக்குசரியான முறையில் பத்திரத்தை நிரப்ப உதவிசெய்பவர்கள் போதிய அளவு இல்லையென்றும் மற்றொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில்

(4-ம் பக்கம் பார்க்க)

# நூறு ரூபாய்க்கு மாத்திரமே பழைய நோட்டு மாற்றலாம்

## மோசடி முயற்சிகளை முறியடிக்க புதிய நடவடிக்கை

கோட்டை, வெள்ளி

**ஒருவர் ஆகக் குறைந்தது 100 ரூபா தொகைக்கான பழைய நோட்டுக்களை மட்டுமே மாற்றிக் கொள்ளலாம் என அரசாங்கம் புதிய உத்தரவொன்றை இன்று பிறப்பித்துள்ளது.**

பெருந்தொகையான பணத்தைப் பதுக்கிவைத்திருப்பவர்கள் தங்கள் பணத்தைப் பகிர்ந்து பலரிடம் கொடுத்து மாற்றும் முயற்சிகளை முறியடிக்கவே இந்தப்புதிய உத்தரவை அரசு விதித்துள்ளது. பல முதலாளிகள் தங்களுக்கு ஏற்படப்போகும் வரிப்பளுவைக் குறைக்கவும், பதுக்கலை அரசாங்கத்துக்கு தெரியாது மறைக்க அப்பாவிப் பொதுமக்களிற்சிலரைப் பயன்படுத்தித் தங்கள் பழைய நோட்டுக்களை பிரித்துப் பிரித்துக் கொடுத்து ... ள ம் ... அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 1000 ரூபாவிலிருந்து சதாரண மக்களுக்கு வசதியாக தொகையை 100 ரூபாவாகக் குறைத்துள்ளது.

பதுக்கலைத் தடுக்கவும், முதலாளிகள், பதுக்கல்காரர்கள் ஆகியோரின் பணம் தேசிய நலனுக்குப்பயன்படவும் பொதுமக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா பொதுமக்களுக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

## பண்டாரவன்னியன் நினைவு விழா இன்று

### குமாரசூரியர் கலந்து கொள்வார்

முல்லைத்தீவு, சனி

பண்டாரவன்னியன் விழா இன்று கற்சிலைமடுவிலும், முள்ளியவளையிலும் கொண்டாடப்படுகிறது. தபால் தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியர் இவ் விழாக்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

வவனியா பண்டாரவன்னியன் கழகம் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது, பண்டாரவன்னியன் கழகத்தின் போஷகர் வவனியா முன்னாள் எம். பி, திரு தா. சிவசிதம்பரமும் தலைவர் முல்லைமணி வே. சுப்பிரமணியமும் மற்றும் கழக உறுப்பினர்களும் இவ் விழாவுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பான முறையில் செய்துள்ளனர்.

## கொழும்பில் இன்று ஐந்து தமிழ் நூல்கள் வெளியீடு!

கொழும்பு, சனி எழுதிய 'அவாந்திக் கரை இளம்பிறை இலக்கள்' என்ற நூலை தகவல்

## கொழும்பில் மோசடிகாரர் கைது!

கொழும்பு, வெள்ளி

தற்காலிக வாசகாலபர் மிட்டில் இலங்கையில் வசித்துவந்த ஒருவர் 2 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கரன்ஸிகளுடன் ... சார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் இருவரும் தலா 1000 மட்டுமே மாற்றுவதற்கு உரிமையுடையவர்கள். இவர்களுக்கு 2 வருட கடூழியச்சிறைத் தண்டனை ... 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை புதிய காசு வழங்கப்பட்டது, காலை 11 மணிவரை 250 ரூபாவும் அதன் பின் கொழும்பிலிருந்து கிடைத்த தகவலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இன்று ஐந்து தமிழ் நூல்கள் வெளியீடு!

கொழும்பு, சனி

இளம்பிறை இலக்கிய வட்டத்தினரின் ஐந்து புத்தகங்களின் வெளியீட்டு விழா இன்று கொழும்பு 'ஹொட்டேல் சமுத்திரா'வில் நடைபெறவிருக்கிறது- மாலை 6-15 மணிக்கு இவ்விழா ஆரம்பமாகும்.

பேராசிரியர் ஆ. சதாசிவம் எழுதிய 'ஞானப்பள்ளு' என்ற நூலை திரு எஸ்.எஸ். குலத்திலக்கா வெளியிட்டு வைப்பார்.

திரு ஏ.ஜே கனகரத்தினா எழுதிய 'மதது' என்ற நூலை நியமன எம் பி திரு எம் ஸி ஸி. சுப்பிரமணியம் வெளியிட்டு வைக்க, திரு கே வ. லக்ஷ்மண ஐயர் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

திரு. எச். எம். பி. முஹிதீன் எழுதிய 'அவாந்திக் கரைகள்' என்ற நூலை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர். எஸ். பெரேரா வெளியிட்டு வைப்பார்.

'ஈழத்து தமிழ் நூல் வரலாறு' என்ற வித்துவான் எவ். எக்ஸ் ஸி. நடராசா எழுதிய நூலை தபால் தந்தி அமைச்சர் திரு பெச குமாரசூரியர் வெளியிட்டு வைப்பார்

தபால் தந்தி அமைச்சர் பெச. குமாரசூரியர் தலைமையில் 'எஸ் பொ. அறிக்கை' வெளியிட்டு வைக்கப்படும். உதவி தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஜனாப் ஏ எல். ஏ. மஜீத், எஸ் பொ. அறிக்கையை வெளியிட்டு வைப்பார்

உத்தரவொன்றை இன்று பிறப்பித்துள்ளது.

பெருந்தொகையான பணத்தைப் பதுக்கிவைத்திருப்பவர்கள் தங்கள் அப்பாவிப் பொதுமக்களிற்சிலரைப் பயன்படுத்தித் தங்கள் பழைய நோட்டுக்களை பிரித்துப் பிரித்துக் கொடுத்து மாற்றுகிறார்கள். இதை அறிந்தே அரசாங்கம் ஆரம்சத்தில் குறிப்பு பொதுமக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என நிதியமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா பொதுமக்களுக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

......

## ரூ. 1 கோடியுடன் மறைவு!

### இப்போது வட ஆபிரிக்காவில் இருக்கிறாராம்!!

இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ற ஒரு அந்நியர் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாவுடன் மாயமாய் மறைந்துவிட்டாராம்!

சமீபத்திய புதிய சட்டத்தின் பிரகாரம் பெருந்தொகையான தனது பணத்தை மாற்றுதல் கஷ்டம் என்பதையும் தனது பதுக்கல் விடயம் அரசாங்கத்துக்கு தெரிந்துவிடும் என்பதையும் அறிந்த இவர் பிறநாட்டுப் பணமகப்பெறத்தக்க வகையில் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு கட்டுநாயக்கா சென்று விமான மூலம் பயணமாகிவிட்டார் எனத் தெரிய வருகிறது.

தேயிலை, றப்பர் வர்த்தகரான இவர் பொருள் கொள்வனவு இலாகாவுக்கு 80 ஆயிரம் ரூபாவும், தொழில் திணைக்களத்துக்கு பல ஆயிரம் ரூபாவும் கொடுக்கவேண்டும் எனவும் அறியப்படுகிறது. தற்போது இவர் வட ஆபிரிக்காவிலுள்ள நகரொன்றில் இருப்பதாகக் கூறப்படுகிறது, அரசாங்கம் இவர் மேல் சட்டநடவடிக்கை எடுத்து வருகிறது.

## ஜேப்படி செய்து பணத்தை புதைத்தாராம்

ஏரூவூர், வெள்ளி

ஓட்டமாவடியிலிருந்து வந்த ஒருவரிடமிருந்து ஜேப்படி செய்தபணத்தை ஒருவர் கோயிலுக்குப்பக்கத்தில் புதைத்துவைத்தாராம். அவரைத் துரத்திச்சென்ற ஒருவர் அப்பணத்தைத் தோண்டியெடுத்து பொலிசாரிடம் ஒப்படைத்திருக்கிறார்.

ஜேப்படி செய்த 700 ரூபாயுடன் அந்நபர் ஓடும்போது பலர் துரத்திச் சென்றனர்; பணத்தைப்புதைத்துவிட்டு என்னிடம்பணமில்லையென்று அவர்கூறவே பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் புதைக்கப்பட்ட பணம் எடுக்கப்பட்டது.

கொழும்பு, வெள்ளி

தற்காலிக வாசகாலபர்மிட்டில் இலங்கையில் வசித்துவந்த ஒருவர் 2 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கரன்ஸிகளுடன் இந்தியாவுக்குப் பயணமாகும் சமயத்தில் கட்டுநாயகா விமான நிலயத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார். இவர் 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபா வருமானவரி இலாகாவுக்குச் செலுத்தவேண்டியுள்ளது. என்று விசாரணையின் போது தெரியவந்தது வருமானவரி இலாகாவிடம் இவர்ஒப்படைக்கப்பட்டார் (சிபிஏ)

இன்னுமொருவரிடம் கொழும்பில் வைத்து ஒரு லட்சம் ரூபா கண்டுபிடிக்கப்பட்டது. இவர் என்னவிதத்தில் இந்தப் பணத்தைச் சேர்ந்தார் என்பதுபற்றிய தகவல் எதுவும் இவரால் கொடுக்கமுடியவில்லை. கொழும்பு வங்கிஒன்றில் 41 உறுதிப்பத்திரங்களில் பொய்யான தகவல்களைக் கொடுத்து 41,000 ரூபா மாற்றியஒருவரையும்பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். 20 ஒரே வீட்டு கூப்பன்களை வங்கிக்குக்கொண்டு சென்று வெவ்வேறு பெயர்களைக் கொடுத்து 20,000 ரூபா மாற்றியஒருவரையும்பொலிசார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் இருவரும் தலா 1000 மட்டுமே மாற்றுவதற்கு உரிமையுடையவர்கள். இவர்களுக்கு 2 வருட கடூழியச்சிறைத்தண்டனை கிடைக்கும் என அரசாங்கம் அறிவுத்தது.

புதிய சட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தடையாயுள்ள சமூக விரோத சக்திகள் மீது அரசாங்கம் தீவிர கண்காணிப்புச் செலுத்தி வருகிறது.

### 25 வீதம் கமிஷன்

அனுராதபுரத்தில் ஒவ்வொரு 100 ரூபாவுக்கும் 25 ரூபா வீதம் கமிஷன் பெற்று பழைய 50, 100 ரூபா நோட்டுக்களை சிலர் மாற்றிக் கொடுப்பதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அங்கு இரகசியப் பொலிசார் பரவலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் வங்கிகளின்முன் அதிகாலை தொடக்கமே மக்கள் நீண்டகியூவில் தினமும் காணப்படுகின்றன, யாழ் மக்கள் வங்கியில் நின்ற கியூ முழுவதற்கும் நேற்றுப் பணம் மாற்றிக் கொடுக்கப்பட்டது, 1552 பேருக்கு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை புதிய காசு வழங்கப்பட்டது, காலை 11 மணிவரை 250 ரூபாவும் அதன் பின் கொழும்பிலிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து ஒருவருக்கு ரூபா 100 வீதமும் மாற்றிக் கொடுக்கப்பட்டது. சாப்பாடு இன்றி வங்கி ஊழியர் கடமையாற்றி பொதுமக்களுடன் ஒத்துழைத்து வருகின்றனர்.

இ போ சபையில் பழைய நோட்டுகளை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் கண்டக்டர்கள் பஸ்சில் பழைய நோட்டுக்களை வாங்க வேண்டாம் என்றும் நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

### ஹோமகம கொள்ளை ரூபா 20,000 வெகுமதி

ஹோமகம வங்கியில் நடைபெற்ற கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களின் தகவல்களைத் தருபவர்களுக்கு ரூபா 20,000 வெகுமதியாக வழங்கப்படும் என்று அரசாங்கம் இன்று அறிவித்தது

கடந்தமாதம் நடைபெற்ற இக்கொள்ளையில் 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா களவாடப்பட்டது.

இரத்தினபுரியில்

## இரத்தினக்கல் கொள்வனவு விற்பனவு நிறுவனம்

கோட்டை, வெள்ளி

இரத்தினபுரியில் அகில இலங்கை ரீதியில் இரத்தினக்கல் கொள்வனவு விற்பனவு கூட்டுறவு நிறுவனம் ஒன்று அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நிறுவனம் மக்கள் வங்கியின் ஆதரவில் இயங்கும் என மக்கள்வங்கி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இரத்தினக்கல் வியாபாரத்தில் சட்டவிரோதமாகப் பலர் ஈடுபட்டு பெருந்தொகையான அன்னிய செலாவணியைப் பெறுகிறார்கள் எனவும் இதைத் தடைசெய்வதே மேற்படி நிறுவனத்தின் பிரதான நோக்கம் எனவும் வங்கி அதிகாரி மேலும் இந் நிறுவனம்பற்றிக் கூறுகையில் தெரிவித்துள்ளார்.

இந்த இரத்தினக்கல் கொள்வனவு விற்பனவு நிலையம் விரைவில் நிறுவப்படவிருக்கும் இரத்தினக்கள் கூட்டுஸ்தாபனத்துடன் இணைந்து செயல்படும்.

......

## நகைகள் தட்டுப்பாடு

அம்பன், வெள்ளி

பருத்தித்துறையிலுள்ள பல நகைக்கடைகளில் நகைகள் பெருந்தொகையானவை நாணயமாற்றத்தால் விற்பனையாகியுள்ளன பெரும்பாலானோர் பணத்தைக் கொடுத்து பவுணைப் பெறுகின்றனர். இதனால் இங்கு பவுணுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## இறைச்சியை மட்டும் எடுத்துச் சென்றனர்

அம்பன், வெள்ளி

வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்த ஒருவர் வீட்டில் சில தினங்களுக்கு முன் இரவு நேரத்தில் கள்வர் கோஷ்டியொன்று புகுந்து அங்கு நின்ற ஆட்டுக் கடாவை வளவுக்கு வெளியில் கொணர்ந்து கொன்று இறைச்சியை எடுத்துக் கொண்டு தலையையும் தோலையும் ஆடு கட்டப்பட்டு நின்ற இடத்திலேயே மிகவும் பக்குவமான நிலையில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர் மறுநாள் காலை ஆட்டுக் கடாவுக்கு உணவு வைக்கச் சென்றபொழுது கடாவின் தோல் மட்டுமே கிடந்ததாம். பருத்தித்துறைப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாகப் பொலிசார் புலன்விசரணை செய்து வருகின்றனர். கள்வர் நடமாட்டம் இப்பகுதியில் அதிகரித்து வருவதாதக் கூறப்படுகின்றது.

# மன்னூர் தேர்தல் ஆட்சேபவழக்கு இன்று காலை வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு நேற்று பதினோராவது தினமாக யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்கு கோட்டினுள் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் மன்னார் தொகுதிக்கு வி. ஏ. அழகக்கோன் ஆட்சிமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து கடந்ததேர்தலில் மன்னார் தொகுதியில் ஐக்கியதேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட மன்னார் பட்டண சபை தலைவர் ரஹிம் மனு தாக்கல் செய்திருந்தார். இம்மனுமீதான விசாரணை நடைபெற்றுவருகிறது.

மனுதார் சார்பில் அட்வகேட் இசடீன் மொகமட், அட்வகேட் குரோசட் தம்பையா, அட்வகேட் சகிட் ஆகியோரின் உதவியுடனும் ஆஜரானார். எதிர் மனுதார் சார்பில் அட்வகேட் எம். திருச்செல்வம், அட்வகேட் எச். டி. தம்பையா, அட்வகேட் எஸ். சிவானந்தன், அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் புறக்டர் பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

நீதியரசர் விசாரணையை இன்று காலைவரை ஒத்தி வைத்தார்.

### டி. ஐ. ஜி. யாக தமிழர் நியமனம்

கொழும்பு, வெள்ளி

பொலிஸ் சுப்பிரின்டன்களான திருவாளர்கள் ருத்திரா ராஜசிங்கம், ஐவர் வான்வெஸ்ட் ஆகிய இருவரும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்களாகப் பதவிஉயர்வு பெற்றுள்ளனர் (சிபிஏ)

### தற்காலிக மாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாஜிஸ்திரேட் இருநாட்கள் லீவில் சென்றுள்ளதால் புறக்டர் திரு எஸ் கனகரத்தினம்இன்றும்நாளையும் தற்காலிக மாஜிஸ்திரேட்டாகக் கடமையாற்று

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அறிவிப்பு:

# தமிழக அரசின் சிறந்த நடிகர் பரிசை பெறமாட்டேன்!

சென்னை, அக் 30

தமிழக அரசின் சிறந்தநடிகர் பரிசை வாங்கமாட்டேன்என்று 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அறிவித்துள்ளார்.

எல்லாமே (தி.மு.க.) கட்சிக் கண்ணோட்டத்தில்நடைபெறுகிறதென்றும், பரிசை தங்கள் கட்சிக்காரருக்கே கொடுக்கட்டுமென்றும் கண்துடைபபு வலை தனக்கு ஒத்துவராது என்றும் நடிகர் சிவாஜி தெரிவித்துள்ளார். திரு. சிவாஜி கணேசன் அளித்துள்ள ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:-

என்னை தமிழக அரசு சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுத்திருக்கிறதாம் அந்தப்பரிசு எனக்கு தேவையில்லை பரிசு வாங்குற அளவுக்கு எனக்கு தகுதி கிடையாது இன்னும் நடிப்புபற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றே முயற்சி செய்து வருகிறேன்.

பரவாய் இல்லை... இந்த அரசு இன்றுவது என்னையும் ஒரு நடிகன் என்று ஒப்புக்கொண்டதே மகிழ்ச்சி இந்தமாதிரி கண்துடைப்பு வேலை எனக்கு ஒத்துவராது பரிசை தங்கள் கட்சியை சார்ந்தவர்களுக்கே அவர்கள் கொடுக்கட்டும் எல்லாமே கட்சிக் கண்ணோட்டத்தில் நடைபெறகிறது என்பது ஊர் அறிந்த விஷயம் ஆகிவிட்டதே.

### மக்கள் தீர்ப்பே மகேசன்தீர்ப்பு

அரசு என்பது இனம் மொழி, கட்சிசார்புடையது அல்ல எங்கள் அரசு என்று எல்லோரும் கூற வேண்டும் அதுதான் நல்ல அரசாங்கம் ஆனால் இந்த அரசு இப்படித்தான் நடக்கிறதா? என்று கேட்டுவிடாதீர்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக என்ன நடக்கிறதென்பதை மக்களேகூறட்டும் மக்கள் தீர்ப்புதானே மகேசன் தீர்ப்பு தனிப்பட்ட சங்கமோ தனிப்பட்டவர்களோ பரிசு கொடுப்பதுநடிகருக்கு பெருமையாக இருக்கலம். ஆனால் அரசாங்கம் ஒரு கலைஞனைத் தேர்ந்தெடுத்து கௌரவிப்பதுதான் நியாயமானது.

### இருட்டடிப்பு நடக்காது

கட்சி, மொழி, இனம் எல்லாவற்றையும் தள்ளிவைத்துவிட்டு தாங்கள் 'மக்களின் காவலன்' என்பதை புரிந்துகொண்டுபரிசு கொடுக்க வேண்டும் கடந்த இரண்டுவருடமாக இப்படி நடந்து வந்திருக்குமாஎன்று என்னைக் கேட்காதீர்கள். ஆயிரக்கணக்கான மக்களின் கேள்விகளுக்குபதில்சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு பத்திரிகைகள் நியாயத்திற்காகப் போராடவேண்டும். நியாயத்தை எழுதுவதுதான் எழுத்தாளர் மரபு அந்த நியாயத்தைக்காப்பாற்றுங்கள் பத்திரிகைக்காரர்கள எல்லா நேரத்திலும் எல்லோரையும் எப்போதும் இருட்டடிப்புச் செய்து விடமுடியாது. நீங்கள் சொல்லுகிற அந்த வெளிச்சம் ஒரு நாளைக்கு உதயம் ஆகத்தான் போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள C. B. 9000 தொடர்பிலக்கமுள்ள ''சிவிலியன் சவ லட்'' வேன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மொடர்ண் பேணிச்சர், 79/2, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் போன்: 7364. 2414

முழுவதும் திருத்தம் செய்யப்பட்ட E L. வொக்ஸ்ஹோல் வைவன் கார் உடன் விற்பனைக்குண்டு. பி ஏ. அருள்தந்தவேல், 31, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. 2411

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் 463-ம் இலக்கத்தில் இருக்கும் அரிசி ஆலையிலுள்ள மோட்டர்களும், கல்லரும், மிளகாய்-மாவு அரைக்கக்கூடிய கிறைன்டர்களும், இன்னும் பல மெஷினறிகளும் உடன் விற்பனைக்குண்டு. முழு விபரங்களுக்கு நேரில் வரவும். 2410

'புத்தொளி' எழுதிய 7-ம் வகுப்பு சமூகவியல் (சரித்திரம், பூமிசாத்திரம், குடியியல்) 3-ம் தவணை வெளிவந்துவிட்டது. விலை: 85 சதம். கிடைக்குமிடம்: ஸ்ரீலங்கா புத்தகநிலையம், யாழ்ப்பாணம், தமயந்தி பதிப்பகம், அச்சுவேலி. 2412

கமரா:

Canen Canonte-35 M M யப்பான் கமரா உடன் விற்பனைக்குண்டு விலை ரூபா 1200/-. பழைய நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும் இல. 27, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2413


மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே. ஆர் விஜயா
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

REGAL
Jaffna
Daily 4Shows
Clint Eastwood
Richard Burton
in
WHERE THE EAGLE DARE


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 31—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை,

**344 மீ. அன்ட் 61 மீ**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்

இரவு 6-15 பாமாலை, 7-00 திரைகானம், 7-15 ஜலதரங்கம், 7-45 சிறுகதை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு

......

## பாப்பாண்டவர் வருகிறார்

கோட்டை, வெள்ளி

பாப்பாண்டவர் டிசெம்பர் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வாரெனத் தெரியவருகிறது. இவர் தனது பிலிப்பைன் விஜயத்தை முடித்துக்கொண்டு ரோமுக்குத் திரும்புகையில் இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளார்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
எம். ஜி, ஆர்-பத்மினி
நடித்த
புதுமைப்பித்தன்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-00, 6-00, 9-30
எம். ஜி. ஆர். பானுமதி
நடித்த
மலைக்கள்ளன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ—மனோரமா
நடித்த
செல்லப்பெண்


## யாழ். மாநகர சபை கேள்வி அறிவித்தல்

### பொருள் விநியோகம்-1971

1971-ம் ஆண்டிற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் சுண்ணாம்பு, கிடுகு மணல், உடைகல்லு, கிளறுசல்லி, கண்டகல், கிறசர்சல்லி, கிறிற், தேங்காய்மட்டை முதலிய பொருட்கள் விநியோகம் செய்தற் பொருட்டு பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து இரு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. பின்வருமாறு சபையின் வட்டாரங்கள் நான்கு பிரிவுளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பிரிவு (1) வட்டாரம் 18, 19 20, 21, 22.

பிரிவு (2) வட்டாரம் 1, 17, 16, 23, 14, 15.

பிரிவு (3) 2, 3, 4, 5, 6, 13.

பிரிவு (4) வட்டாரம் 7, 8, 9, 10, 11, 12

ஒரு கேள்விக்காரர் ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவுக்கு கேள்விகள் சமர்ப்பிக்கலாம் ஆனால் ஒரு பிரிவுக்கு மாத்திரம் பொருள் விநியோகிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு கேள்விக்காரரும் தனித்தனியாக ஒவ்வொரு பிரிவிற்கும் விண்ணப்பம் அனுப்பவேண்டும்.

3. கேள்விக்காரர் ஒவ்வொருவரும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-ம் படிவப் பெறுமதியாக ரூபா 5/-ம் 10-11-70-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் செலுத்தி மராமத்துப் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்று 15-11-70-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவு செய்த கடிதமூலமாகவோ அன்றேல் நேரிலோ விண்ணப்பித்தல் வேண்டும்.

4. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொருட்கள் விநியோகம் 1971'' என்று குறிப்பிடப் படல்வேண்டும்.

5. மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. குறிப்பிட்ட திகதிக்கு பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. குறைந்த கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து கொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. மேற்படி பொருட்கள் பிரிவு ரீதியாக விநியோகம் [illegible]

# மிளகாய்ப்பொடி வீசி தாலிக்கொடிவழிப்பறி!

கைதடி, வெள்ளி

பாடசாலையை விட்டு வெளியே வந்த ஆசிரியையின் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவி அவரது தாலிக்கொடியை திருடர்கள் அறுத்துக் கொண்டு ஓடினர்களாம்.

கைதடி எருதிடல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியையான திருமதி சோதி ஐயாத்துரை என்பவர் பாடசாலையைவிட்டு வெளியே வந்தசமயம் அவரது கண்களில் மிளகாய்த் தூளை வீசி தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு திருடர்கள் ஓடிவிட்டார்களாம். சாவகச்சேரிப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து சந்தேக நபர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை

## நகை வியாபாரி கொலை வழக்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சபாரத்தினம் இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செல்லத்துரை நடராசா ஆகிய இருவரும் 1968-ம் ஆண்டு ஐப்பசி மாதம் பருத்தித்துறை நகை வியாபாரியான ஜனாப். எம். எம். சுல்தான் மொகதீன் என்பவரைச் சதி செய்து கொலை செய்ததாக கொழும்பு இரகசியப்பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பபட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் முடிவில் மாஜிஸ்திரேட் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டை வாசித்துக்காட்டியபோது எதிரிகள் இருவரும் தாங்கள் சுற்றவாளிகள் எனக்கூறவே மாஜிஸ்திரேட் வழக்கை சுப்ரீம் கோட்டிற்கு பாரப்படுத்தியுள்ளார். 1-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் சி. தாமோதரம்பிள்ளையும் 2-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் என். நடராசாவும் ஆஜரானார்கள்.

காங்கேசன்துறை

## சீமெந்து உற்பத்தி குறைவினால் தினம் ரூபா 1 லட்சம் நஷ்டமாம்!

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளதால் தினமும் 1 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுகிறதாம். இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சருக்கு பொது தொழிலாளர் யூனியன் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்மாவட்டத்தில் தற்போதுநிலவும் மின்சாரக் கோளாறினால் காங்கேசன்துறைசீமேந்து தொழிற்சாலை இயந்திரங்களை ஒழுங்காக இயக்க முடியாததாலேயே சீமெந்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாம். இதனால் இதுகாலம் வரை தின[illegible] விற்பனை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான சீமெந்து விற்பனை அரைவாசியிலும் [illegible] துள்ளது [illegible] உற்பத்தி குறைந்துள்ள[illegible] தனியார்களுக்கு [illegible] மக்கள் பெரிதும்கஷ்டப்படுகின்றனர்

இதுகுறித்து சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் அமைச்சருக்கு அனுப்பிய அவசர மகஜரில் தெரிவித்துள்ளதாவது:-

''தொழிற்சாலைக்கு என மின்சாரம் காங்கேசன்துறைச்சந்தியில் உள்ள மின்வினியோக நிலையத்தில் இருந்து பெறப்பட்டது. இதனால் சீமெந்து கூடிய அளவு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டதுடன், சேமித்தும்வைக்கப் பட்டது. சென்ற சில காலத்தில் தொழிற்சாலை நிர்வாகம் சுன்னாகம் மத்திய மின் விநியோக நிலையத்தில் இருந்து மின் பெறத்தொட[illegible]கியது. இதனால் தொழிற்சாலைக்கான காங்கேசன் துறை சந்தியிலிருந்த மின் நிலையத் [illegible] முறையில் பரிபா[illegible] துவிட்டது தற்போது மத்திய மின்நிலைய இயந்திரப் பழுது காரண[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

## சென். பற்றிக்ஸ் வெற்றி

### சென். ஜோன்ஸின் சிறந்த ஆட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளிலும் சென் பற்றிக்ஸ் வெற்றி பெற்றது.

மேற்படி இரு கல்லூரிகளின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டம், மிகவும் ரசிப்பாகவே காணப்பட்டது. இந்த ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் கோஷ்டி வீரர்கள் தோல்வி அடைந்தாலும் இவர்களின் ஆட்டம் சிறப்புற்று விளங்கியது.

ஆட்டம் தொடங்கி மூன்று நிமிடங்களுக்குள் சென் ஜோன்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர் என். அன்பரசு ஒரு கோலைப் போட்டுவிட்டார். ஆனால் இடை வேளையின் போது சென் பற்றிக்ஸ் கோஷ்டியினரே 2-1 கோல்களால் முன்னணியில் நின்றார்கள். இடைவேளையின் பின் சென் ஜோன்ஸ் கோஷ்டியினரின் விளையாட்டு ரசிப்பாக காணபபட்ட போதிலும், இவர்களால் கோல்களைப் போடமுடியவில்லை. பற்றிக்ஸ்கோஷ்டியினரே அடுத்தடுத்து மேலும் பல கோல்களைப் போட்டவண்ணமே இருந்தனர். ஆட்ட முடிவில சென். பற்றிக்ஸ் 6-1 கோல்களால், சென். ஜோன்ஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் சார்பில், பிரான்சிஸ், மதுரநாயகம், எஸ் ஆர். எஸ், கொன்ஸலஸ் ஆகியோர் 2, 2, 1, 1 கோல்களைப் போட்டனர்

இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்

இந்த இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்றபோட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 3-1 கோல்களால் வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு ராஜேந்திரா மத்தியஸ்தராகக், கடமையாற்றினர். [தே நி]

— —

## அபராதம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கரவெட்டியைச் சேர்ந்த வி. கந்தப்பு என்பவர்தான் ஓட்டிச்சென்ற ட்ராக்டருக்குரிய அரசாங்க அனுமதிப் பத்திரங்கள் வைத்திராத குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. விக்னராசாவால் ரூபா 250 அபராதம் விதிக்கப்பட்டும் அவரது சாரதி லைசென்சை ஒரு வருடம் நிறுத்தியும் வைத்துள்ளார்.

— —

## நிராகரிப்பு

பாரிஸ், அக். 30

ஏற்றுக்கொள்ளப் பட்ட திட்டமொன்றின் அடிப்படையில்அமெரிக்கா தனது படைகளை தென்வியட்னாமிலிருந்து விலக்கிக் கொள்வது சம்பந்தமாக தெரிவித்த யோசனைகளை வட வியட்னாமும் வியட்காங்கியரும் நிராகரித்து விட்டனர்

கலைப்பிரிவுக்கு

## மேலும் சிலருக்கு அனுமதி

பருத்தித்துறை, வெள்ளி

'பல்கலைக்கழகக் கலைப்பிரிவுக்கு வடமராட்சிப் பகுதியிலிருந்து சில மாணவர்கள் மேலதிகமாக அழைக்கப்படுகிறார்கள். தெரிவுசெய்யப்பட்ட பலர் வறுமை காரணமாகவும் வேறு தொழில் வாய்ப்புகள் கிடைத்ததன் காரணமாகவும் பல்கலைக்கழகக் கல்வியை நாடாத காரணத்தால் அவர்களுக்குக் குறைவாகப் புள்ளிகள் பெற்றவர்கள் வரிசைக் கிரமப்படி அழைக்கப்படுகின்றனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து மூன்று மாணவா அழைக்கப்பட்டுள்ளனர்.

## உதைபந்தாட்டம்

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ் சென்றல் கல்லூரியும், வசாவிளான் மத்திய கல்லூரியும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் வசாவிளான் வெற்றியீட்டியது.

யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்தின் அனுசரணையின் கீழ் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 2ம் பிரிவுப் போட்டியில் மேற்படி கல்லூரிகள் மோதிய போட்டியில் வசாவிளான் 4—1 கோலால் வெற்றிபெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் கீழ் மேற்படி கல்லூரிகளின் 3ம் பிரிவுப்போட்டியில் இரு கல்லூரிகளும் தலா ஒரு கோல் போட்டதால்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

## 'பதவியை நீடிக்குக'

மாவிட்டபுரம் வெள்ளி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. கே. சிவப்பிரகாசத்தின் பதவிக் காலத்தை நீடிக்கும் படி கல்வி இலாகாவைக்கோரும் தீர்மானம் ஒன்றை மேற்படி கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது,

## தீர்மானம்

உடுப்பிட்டி, வெள்ளி

வல்வெட்டி உபதபாற்கந்தோருக்கும், நவிண்டில் உபதபாற்கந்தோருக்கும்தொலைபேசி இணைப்புச் செய்து கொடுக்க வேண்டுமென்று தபால் பகுதியினரைக் கோரும் தீர்மானம் உடுப்பிட்டிக் கிராமசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது


## கேள்வி விளம்பரம்

### இ. போ. ச. சிற்றுண்டிச்சாலை

### கோண்டாவில் — யாழ். டிப்போ

இலங்கை போக்குவரத்து சபை கோண்டாவில் யாழ். டிப்போ மேலதிகாரியால் கோண்டாவில் யாழ். டிப்போ சிற்றுண்டிச் சாலைக்கு உணவு, சிற்றுண்டி முதலியன விநியோகிப்பதற்கு விலைப்பட்டியலுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர் திருப்பிப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10/- செலுத்தித் தேவைக்குரிய விண்ணப்பப் பத்திரங்களை கோண்டாவில் யாழ். டிப்போ மேலதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளுக்கான விண்ணப்பங்கள் 10-11-70ம் திகதி பி. ப. 1 மணியுடன் முடிவடையும்.

2524

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ — மனோரமா
நடித்த

# செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-காஞ்சனா
நாகேஷ்-மஞ்சுளா
நடித்த

# சாந்தி நிலையம்

# வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

7. குறைந்த கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து கொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. மேற்படி பொருட்கள் பிரிவு ரீதியாக விநியோகம் செய்யப்படவேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
27-10-70. 2147

## 'வேலையை உடனடியாக நிறுத்துக'

கோட்டை, வெள்ளி

ஓவசியர்களின் சேவையை அரசாங்கம் திடீரென நிற்பாட்டியுள்ளது.

இவர்களது சேவையை அரசாங்கம் சமீபத்தில் மேலும் 6 மாத காலம் நீடித்திருந்தது தற்போது அரசாங்கம் வேலையை நிறுத்தும்படி அவர்களுக்குத் தந்திமூலம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த விரைவில் ஒரு நாளைக் குறிக்குமாறு அகில இலங்கை ஓவசியர் சங்கம் பிரதமர் திருமதி சிறிமாவுக்கும் நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமைச்சருக்கும் கடிதம் எழுதியுள்ளது.

...யப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான சீமெந்து விற்பனை அரைவாசியிலும் குறைவாக குறைந்துள்ளதாம் தற்போது சீமெந்தி... உற்பத்தி குறைந்துள்ளதா... தனியார்களுக்கு சீமெந்து விநியோகம் செய்யப்படுவதில்லை. அரசாங்க கொந்தருத்துக்காரர், பல நோக்குச் சங்கம் ஆகியவற்றுக்குத்தான் விகிதாசாரப்படி வழங்கப்படுகிறது

தொழிற்சாலையில் 10 ரூபா 50 சதத்துக்கு வாங்கப்பட்ட ஒரு பைசீமெந்து கூடிய விலைக்கு விற்கப்படுவதால்

...யது. இதனுல் தொழிற்சாலைக்கான காங்கேசன் துறை சந்தியிலிருந்த மின் நிலையத்தை நல்ல முறையில் பரிபாலிக்காதுவிட்டது தற்போது மத்திய மின்நிலைய இயந்திரப் பழுது காரணமாக மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், தொழிற்சாலை உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. இதனுல் விற்பனை குறைந்துள்ளது. இந்நிலை தொடர்ந்து நீடிக்காமல் நிலைமையை சுமுகமாக்க தொழிற்சாலைக்கு சொந்தமான மின் நிலையத்தை புனரமைப்பு செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளது.

...மப்படி அழைக்கப்படுகின்றனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து மூன்று மாணவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

## 'பல மொழிகளின் அறிவு நமது தேவைகளுள் ஒன்று'

மட்டக்களப்பு வெள்ளி

"பலமொழிகளின் அறிவு தமது அடிப்படைத் தேவைகளுள் ஒன்று எவ்வளவு மொழிகளை எம்மால் பயில இயலுமோ அவ்வளவிலும் நாம் தேர்ச்சி பெறுதல் வேண்டும். குறிப்பாக நமது தாய் மொழியையும் இந்நாட்டின் மற்றத்தேசிய மொழியையும் ஆங்கிலத்தையும்பயிலுதல் சிறந்தது"

இவ்வாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. தேவநேசன்நேசையா பட்டிருப்பு மகாவித்தியாலயத்து பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராய்க் கலந்து உரை நிகழ்த்தும் பொழுது கூறினுர்

வித்தியாலய அதிபர் திரு அருணுசலம் தலைமை தாங்கினுர்

திரு. நேசையா மேலும் கூறியதாவது:- தகவல்கள் பலவற்றை அறிந்து கொள்வது மட்டுமே கல்வியாகாது. ஏனெனில் அத்தகவல்கள் பல விரைவில் காலாவதியாகிவிடும் எனவே நாங்கள் அவ்வறிவோடு இவ்விஞ்ஞான யுகத்திற்கேற்ற பல புத்திமகளையும் பெற்றுக் கொள்ளவேண்டும் கல்வி பள்ளிப்போடு மட்டும் முடிவு பெருத ஒன்ருகும். அதற்கு மேலும் தொடர்ந்துசெல்வது எமது வாழ்வும் எமது கல்விக்கு எல்லையில்லாத வாய்ப்புக்களைதருவது நாம் வாய்ப்புகளை தவற விடாமல் பயன்படுத்துவதற்கு பயிற்றுவதே பள்ளிப்படிப்பாகும் பள்ளிப்படிப்பின் இறுதி நோக்கம் அறிவோ விஞ்ஞானமோ அல்ல; ஞானமாகும் பள்ளிப்படிப்பின் இரண்டாவது பெரிய நோக்கம் இளைஞர்களை சமூகத்தில் சிறந்த உறுப்பினர்களாக்குவதற்குப் பயிற்றுவதே. எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று போதிப்பதால்மட்டும்சமூகத்தின்சிறந்த உறுப்பினர்களாவதற்குநாம்பயில முடியாது. சிறந்த ஒருசமூகத்திலே நாம் வாழுதலும் வேண்டும் இது ஒரு கல்லூரி செய்யக்கூடிய உர்ந்த சேவை."

திருமதி நேசையா பரிசில்களை வழங்கினுர்.

தற்பொழுது அச்சிலிருக்கின்றது!

# 'ஈழநாடு' தினக்குறிப்பு 1971

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

தினக்குறிப்பு 1971
'ஈழநாடு'
தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

...ளலாம்.

கேள்விகளுக்கான விண்ணப்பங்கள் 10-11-70ம் திகதி பி. ப. 1 மணியுடன் முடிவடையும். 2524

புதிய

# பரத்தயன் ஈ-50

பாவித்து காய்கறி, புகையிலைப் பயிர்களைக் காப்பாற்றுங்கள்!


காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் அழுக்கணவன், பனிப்பூச்சி, இலையரிப்புழு, வெண் ஈ, பேன், ஒட்டு உண்ணி, சிற்றுண்ணி, இலயுருட்டிப்புழு, தத்துவெட்டி முதலாம் எல்லாப் பீடைகளையும் கொல்ல வல்ல சர்வபூச்சி நாசினி பரத்தயன் ஈ 50. புகையிலையையும் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரி, தக்காளி மற்றும் மரக்கறிப் பயிர்களையும் பாதிக்கும் சகல வித பூச்சி புழுக்களையும் சிக்கனமாக ஒழித்துக்கட்ட மிக்க வன்மையான நாசினி பரத்தயன் ஈ 50.

கமக்காரரின் வசதிக்காகச் சிக்கனப் பேரத்தல்களில் விற்பனை செய்கிறேம்.

சகாய விலையில் கூடிய பயனளிப்பது பரத்தயன்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பரத்தயன் ஈ 50.




மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர்கள்;
பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி கொழும்பு 10. P.0854

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸியாவில் மேலும் மூன்றுமாதம் போர்ஓய்வுநீடிக்கவேண்டும்

## அமெரிக்கா தெரிவிக்கும் புதிய யோசனை

நியூயோர்க், அக் 30

மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கென்று அமெரிக்கா புதிய யோசனைகள் அடங்கிய நகல் தீர்மான வாசகம் ஒன்றினை ஐ நா மக சபையில் சமர்ப்பித்திருக்கின்றது.

ஆசிய ஆபிரிக்க நாடுகள் மேற்காசிய அமைதிக்கென அண்மையில் தாக்கல்செய்த தீர்மானத்துக்கு மாற்று யோசனைகளாகஇப்பொழுது அமெரிக்கா இந்தப் புதிய யோசனைகளைத்தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்கா தாக்கல் செய்திருக்கும் இந்தப் புதிய தீர்மானத்தில் ஏற்கனவே அமுலில் இருந்துவரும் போர் ஓய்வு இன்னும் மூன்றுமாத காலத்துக்கு நீடிக்கப்படவேண்டும் என்றும் மேற்காசிய அமைதிக்கான ஐ நா விசேஷத் தூதுவர் டாக்டர் ஜாரிங் தலைமையில் மீண்டும் அமைதிப் பேச்சுக்கள் முன் நிபந்தனையின்றி ஆரம்பமாகவேண்டுமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுதுஅமுலில் இருந்துவரும் போர் ஓய்வு அடுத்த வியாழக்கிழமையன்று முடிவுபெறுகின்றது

அமெரிக்கப் பிரதிநிதி நேற்று மகாசபையில் உரை நிகழ்த்துகையில் 1967-ம் ஆண்டு ஐ நா பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானம் முழுமையாக அமுலாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இஸ்ரேல் அ பு நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக அமெரிக்கா ஆயுதம் வழங்குவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார்.

போர் ஓய்வு ஏற்பட்ட பின்னர் சோவியத் உதவியுடன் சூயஸ்கால்வாய்ப் பகுதியில் எகிப்தியர் ஏவுகணைத் தளங்களை நிறுவி போர்ஓய்வு ஏற்பாடுகளை மீறி வருவதினாலேயே இந்த நிலைமை உருவாகியது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜாரிங் தலைமையில் மீண்டும் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்.

# வடபகுதி விவசாயிகளுக்கு அமெரிக்க இளைஞர் பாராட்டு

கிளிநொச்சி, வெள்ளி

இலங்கை - அமெரிக்க கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் இலங்கை வந்துள்ள அமெரிக்க மிசூரி ஸ்ரேட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தற்போது வடபகுதியில்தமது ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பகுதிக்கு வந்த 22 வயதுடைய இவ்விளைஞரான திரு. நோமன் சாள்ஸ்சுவிற், திருவையாறு, விஸ்வமடு. அக்கராயன் பகுதிகளிலுள்ள பண்ணைகளையும், இரணைமடுக்குளம், ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகிய இடங்களையும். பார்வையிட்டார்.

இப்பகுதிகளில் விதைக்கப்பட்ட நெல்லினங்கள், நீர் வாய்க்கால்கள், புல்வர்க்கங்கள், கால்நடைகள்பற்றி நீண்டநேரம் விவசாயிகளுடன்உரையாடினர். விவசாயப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் வேண்டிய விளக்கங்களைக் கொடுத்தார்.

விஸ்வமடு படித்தவாலிபர் குடியேற்றத் திட்டத்திற்கு வந்த இவரை இளம் விவசாயிகள் வரவேற்று, வாழைப்பழம்,இளநீர் ஆகியவற்றைவழங்கியபோது,மிகவும் ஆவலுடன் சுவைத்தார்.

இங்கு உரையாடுகையில் வடபகுதி விவசாயிகள் சுறுசுறுப்புடனும்,நேர்த்தியான முறையிலும் செயற்படுத்துவதைக் காணத் தாம் பேருவகை அடைவதாகவும்இயற்கையின் சக்தியையே முறியடிக்கும் வகையில் செயற்படுவது இங்குள்ள விவசாயிகளது சிறப்பாகும்.

# உற்பத்திக்கு ஏற்ப மக்கள் பெருக்கம் இருக்க வேண்டும்

## நோபல்பரிசுபெறும்விஞ்ஞானியின் கருத்து

மெக்ஸிக்கோஸிட்டி, அக் 30

'உலகில் இப்பொழுது இருந்துவரும் ஊட்டக் குறைவுப் பிரச்னையை 'பசுமைப் புரட்சி' தீர்க்க முடியாது. ஆனால் இதைவிடப் பெரிய பிரச்னையை அளவுக்கு அதிகமான மக்கள் தொகைப் பெருக்கம்- உலகம் சமாளிப்பதற்குச் சற்று அவகாசம் தேடித் தரும், அவ்வளவுதான்'.

இவ்வாறு 1970-ம் ஆண்டுக்குரிய நோபல் அமைதிப் பரிசு பெற்றுள்ள அமெரிக்க வேளாண்மை மண்வள இயல் வல்லுநர் டாக்டர் நார்மன் எர்னஸ்ட் போர்லாக் கூறினர். கோதுமை, நெல் ஆராய்ச்சி நடத்திய புதிய இனங்களைத் தோற்றுவித்தற்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டது.

உலகம் நெடுகிலுமுள்ள வளரும் நாடுகளில் இந்தப் புதிய இனங்கள் கோதுமையிலும் நெல்லிலும் மிக அதிக மேனி காணுவதற்கு வகைசெய்தன.

'அளவுக்கு மிஞ்சியுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்தில் உலகம் கொண்டிருக்கும் புறவாய்மை வழுவிய நிலைகள்தான் இப்பொழுது நமக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பிரச்னை' என்றார் டாக்டர் போர்லாக் செய்தியாளர்கள் மாநாட்டிலே 'உலக உணவு உற்பத்திக்கு ஏற்பத்தான் நமது மக்கள் தொகைப் பெருக்கமும் இருக்கவேண்டும்' என்றார்.

'தொழில் வளர்ச்சிக்கு தகுந்த ஆதரவு கொடுக்கையில், அதே சமயத்தில் வேளாண்மைக்கும் ஊக்க மூட்ட வேண்டும். வளரும் நாடுகள் வேளாண்மைக்கு நியாயமான பங்கு கொடுத்து விட்டால் நம்பிக்கைக்கு இன்னும் இடம் உண்டு' என்றார்.

நோபல் பரிசுக் குழுவில் 5 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் தலைவர் திருமதி ஆஸ்ஸே லியானஸ் சென்ற புதன்கிழமையன்று பரிசினை அறிவிக்கையில் சொன்னதாவது:

டாக்டர் போர்லாக், தமது கண்டுபிடிப்பின் மூலம், வளரும் நாடுகளில் பசிப்பிணியை இன்னும் ஒரு சில ஆண்டுகளில் ஒழித்துவிடுவதைச் சாத்தியமாக்கி உள்ளார்.

புதிய இனங்களைப் பயன்படுத்தியதின் விளைவாக இந்தியாவும் பாகிஸ்தானும் கோதுமை விளைச்சலை அரைமடங்கு பெருக்கியுள்ளன. இந்தியா 1972ம் ஆண்டுவாக்கில் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிடும்

# ராஜதந்திர ஒப்பந்தத்தை ரஷ்யா மீறி விட்டதாம்

## யு. எஸ். குற்றச்சாட்டு

நியுயோர்க். அக் 30

சோவியத் யூனியன் பிரதேசத்தில் சமீபத்தில் தரை இறங்கிய அமெரிக்க விமானத்திலிருந்த நான்குபேரையும் இன்னமும் விடுவிக்காமல் வைத்திருப்பது குறித்து அமெரிக்கா ஆட்சேபம்தெரிவித்திருக்கின்றது.

சோவியத் ஆமீனியா பகுதியில் இறங்கிய மேற்படி விமானத்தில் இரண்டு அமெரிக்க ஜெனரல்களும் ஒரு விமானியும், ஒரு துருக்கிய கேணலும் இருந்தனர்.

இவர்களை இன்னமும் விடுதலை செய்யாமலிருப்பதின் மூலம் சோவியத் யூனியன் ராஜதந்திர ஒப்பந்தங்களை மீறியுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட நபர்களை இன்னமும் காவலில் வைத்திருப்பது அநீதியென்றும் அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்காவிலுள்ளசோவியத் தூதுவர் இதுபற்றி பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் விமானத்திலிருந்த அதிகாரிகளை விடுதலை செய்வது இப்பொழுது நடைபெற்றுவரும் விசாரணைகளின் முடிவுகளைப் பொறுத்திருக்கிறதென்று தெரிவித்தார்,

## நவம்பரில் நடக்கும் யு. எஸ். தேர்தல்

வாஷிங்டன், ஒக் 30

நவம்பர் 3-ம் தேதி நடக் கூட பலப்பல பிரச்னைகள் குறித்து யு எஸ் வெளி

## தற்கொலை

மாவிட்டபுரம், வெள்ளி

வறுமைக் கொடுமையால் நஞ்சருந்தி வயோதிப தம்பதிகள் மரணமானசம்பவம் ஒன்று காங்கேசன்துறையில் நேற்று நடைபெற்றது.

காங்கேசன் துறையைச் சேர்ந்த கொலுவங்கலட்டியில்பிச்சைச்சம்பளம்பெற்று வறுமையான வாழ்க்கை நடாத்திவந்த ஐவரவப் பிள்ளை கந்தப்பிள்ளை, கந்தப்பிள்ளை மாணிக்கம் ஆகிய வயோதிபத் தம்பதிகளே இவ்விதம் மரணமானவர்களாவர்.

பிரஸ்தாப தம்பதிகள் தமது கைப்பட எழுதிய உருக்கமான கடிதத்தில் 'நாம் வறுமையின்கொடுமையை தாங்கமுடியாமல் நஞ்சருந்தி தற்கொலை செய்கிறோம்' என்று எழுதப்பட்டி

இடமாற்றத்திற்கு

# 'மூன்று பாடசாலைகளின் பெயர்களைத் தருக'

## ஆசிரியரிடம் கல்வியமைச்சர் வேண்டுகோள்

பருத்தித்துறை, வெள்ளி

இதுகாலவரை தாம் கடமையாற்ற விரும்பும் மூன்று மாவட்டங்களை ஆசிரியரிடம்கோரிவந்த கல்விப்பகுதி இவ்வாண்டு அவர்கள் விரும்பும் 3பாடசாலைகளை விருப்ப வரிசைக்கிரமப்படி கோரியுள்ளது.

அடுத்தாண்டு ஆரம்பத்தில் செய்யப்படவிருக்கும் அத்தியாவசிய மாற்றங்கள் ஆசிரியரின் விருப்பை அடிப்படையாகத் தழுவியேநடைபெறுமெனத் தெரிகிறது. இதன்படி ஓர் ஆசிரியர்ஒரே மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மட்டுமன்றி, தூர இடங்களிலுள்ள பாடசாலைகளையும் விரும்பிக்குறிக்கலாமெனத் தெரிகிறது. அடுத்தாண்டு பல மகாவித்தியாலயங்களில் 8ம் வகுப்பு இல்லாதுபோவதாலேயே இவ்வித மாற்றங்கள் நடக்கவிருப்பதாகத் தெரிகிறது.

## விவசாயக்கடன்

முசலி, வெள்ளி

மன்னார் மாவட்டத்தில் அடுத்த நிதியாண்டு 1971-ம் ஆண்டு விவசாயக் கடனை ஒவ்வொரு விவசாயிக்கும் ஏக்கருக்கு ரூபாய் 262-00 சிபார்சுசெய்யப்பட்டுள்ளது

இத்தக்கடன் மன்னார் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் பிரிவு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது இக்கடன் பத்து ஏக்கருக்கு மேல் கொடுக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'தமிழ்தெரிந்த சிங்கள ஆசிரியரை அனுப்புங்கள்'

ஊரதீவு, வெள்ளி

எம... கின்ற ... தவர்களின் மொழியான சிங

## மாணவர் கைது

மாவிட்டபுரம், வெள்ளி

ஆனைக்கோட்டையில் சென்றவாரம் நடைபெற்ற திருட்டுக்கள் சம்பந்தமாக பொருட்களுடன் ஒரு பள்ளி மாணவன் கைதாகியுள்ளார் இவரின் வீட்டில் ...

வடக்கில்

## 'சிங்கள மக்கள் சந்தோஷமாக வாழலாம்'

பருத்தித்துறை, வெள்ளி

''சிங்கள மக்கள் வடபகுதியில் எவ்விடத்திலும் சகல வசதிகளுடனும் மகிழ்வுடனும் வாழலாம். சாதாரண தமிழ்மக்கள் சிங்களப் பொதுமக்களைச் சகோதரத்துவ உணர்வுடனும் நேசமனோபாவத்துடனும் நோக்குகின்றனர். இந்நிலைமை தொடர்ந்து ஸ்திரமாகவேண்டின் சிங்கள மக்கள் தமிழும், தமிழ் மக்கள் சிங்களமும் படிக்க வேண்டியது அவசியம்''

இவ்வாறு நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அதிபர் திரு க சிவசிதம்பரம் மேற்படி வித்தியாலய ஊழியர் திரு வீ தர்மதாசாவுக்கும் திருமதி தர்மதாசாவுக்கும் பருத்தித்துறையில் அளிக்கப்பட்ட வரவேற்புக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். ஆசிரியர்கள் திரு ஏ தாமோதரம் பிள்ளை திரு கே கார்த்திகேசு ஆகியோரும் உரையாற்றினர், ஆசிரியர்சங்கச் சார்பாக மணமக்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

# அரசாங்கம் மீது வழக்குத் தொடர்வர்?

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழக வைத்திய பிரிவுக்குக் கூடிய திறமைச்சித்தியுடன் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்களை மருத்துவப்பிரிவுக்கு அனுமதியாது பல் வைத்தியப் பிரிவுக்குத் தெரிவு செய்து இத்தெரிவில் இனரீதியாகப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் இதை ஆட்சேபித்து சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடர இருப்பதாகவும் தெரியவருகிறது.

தமிழ் மாணவர்கள் மருத்துவப் பிரிவுக்கு அனுமதிக்கப்படுவதற்குத்தேவையான சகல தகைமைகளும் பெற்றிருந்தும் அவர்களின் தகைமை புறக்கணிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியளிப்பதாகப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். புறக்கணிப்புக்குள்ளான தமிழ் வைத்தியப் பிரிவு மாணவர்கள் தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு வடமராட்சிப் பெற்றோர் சங்கச் செயலாளரான கரவெட்டி கிழக்கு திரு. சி. சிவலிங்கராசா அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின்மீதுவழக்குத் தொடர்வது சம்பந்தமான சட்ட ஆலோசனைகள் செய்யப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

# எத்தனை சஞ்சிகைகள் இறக்குமதியாகின்றன?

## விபரம் கோருகிறார் பண்டிதர்

கோட்டே, வெள்ளி

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு சஞ்சிகைகள் பத்திரிகைகள் பற்றி ஆட்சிமன்றத்தில் சென்ற நிதி ஆண்டில் அனுப்பப்பட்ட பணம் தனித்தனி எவ்வளவு?

(அ) ஆங்கில மொழியிலும் (ஆ) தமிழ்மொழியி

## இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பரில் நடக்கும் யு. எஸ். தேர்தல்

வாஷிங்டன், ஒக். 30

நவம்பர் 3-ம் தேதி நடக்கும் யு. எஸ். பொதுத்தேர்தல் மிக முக்கியமானவொன்று. செனட் சபையில் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கு இப்பொழுது தனக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறது குடியரசுக்கட்சி அதிபர் நிக்சன் அவர்களே இப்பொழுது தேர்தல்இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார். செனட்சபைக் நம்பிரதிநிதிகள்சபைக்கும் நிற்கும் குடியரசு வேட்பாளர்களை அவர் ஆதரித்துப் பேசிவருகிறார்.

ஏற்கனவே அதிபர் நிக்ஸன் ஒரு டஜன் மாநிலங்களுக்குச் சென்று வந்துவிட்டார், தேர்தல் நாளுக்கு முன் இன்னும் ஒரு டஜன் மாநிலங்களுக்குச் சென்று வந்துவிட்டார்.

ஒவ்வொருநாளும் அதிபர் நிகழ்த்தும் சொற்பொழிவுகளிலே குறிப்பிட்ட வேட்பாளர்களைப் பற்றிக் கூறுவதைவிட பிரச்னைகள் பற்றித்தான் அதிகமாகப் பேசுகிறார். வேட்பாளர்களைப் பற்றிச் சுருக்கமாகத்தான் சொல்கிறார்.

மிக அண்மையில் நடந்த மக்கள் கருத்துக் கணிப்பின்படி மக்களிடையே நிக்ஸனின் செல்வாக்கு அக்டோபர் 7-ம் தேதி தமது புதிய வியட்நாம் அமைதி முயற்சியை அவர் விளக்கியதிலிருந்து அதிகரித்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு பிறகு முதன்முதலாக இப்பொழுது வியட்நாமில் அமெரிக்கஆள் சேதம் மிகக் குறைந்த அளவுக்கு வந்திருக்கிற .

வியட்நாமில் இருக்கும் அமெரிக்க ராணுவ வீரர்களின் தொகையையும்படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது இந்தச் சூழ்நிலை சேர்க்கைகள் எல்லாம் நிக்ஸனுக்கு அவருடைய சொந்தக் கட்சியில் மட்டுமன்றி அவரைக் குறை கூறுபவர்களிடையிலும் கூட ஆதரவை உயர்த்தியுள்ளன என்பதற்கு பலமான சான்று உள்ளது.

மேலும் மேற்கு ஆசியாவில் போர் நிறுத்தம் தொடர்ந்துதாக்குப்பிடித்து வருவதுபோல் தெரிகிறது எகிப்தியர்களும் சரி இஸ்ரேலியர்களும்சரி குறைந்த பட்சம் அன்றுட அடிப்படையிலாவது போர்நிறுத்தத்தை அமுல் செய்யத்தயாராகவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். ரஷ்ய-அமெரிக்க உறவுகள் தாழ்வான நிலையை எட்டியிருந்தாலும் கூட பலப்பல பிரச்னைகள் குறித்து யு எஸ் வெளி உறவு அமைச்சர் குரோமிக்கோ ஆகிய இருவரும் ஆலோசனைகள் நடத்திவருகின்றனர்.

# 'முதலாளித்துவத்தின் மீது முதல் தாக்குதல்'

பருத்தித்துறை, வெள்ளி

என். எம். உருவாக்கியுள்ள புதிய வரவுசெலவுத் திட்டம் முதலாளித்துவத்தின் மீது நடத்தப்பட்டுள்ள முதல் தாக்குதலாகும், சட்டரீதியான முறைகளைக் கையாண்டு முதலாளித்துவத்தின் மூச்சை அடக்க முடியும் என்பதற்கு இப் புதிய வரவுசெலவுத் திட்டம் ஒரு முன்னோடியாகும்.

இவ்வாறு பருத்தித்துறை நகரசபைஉப தலைவர் திரு கே. சேனாதிராசா நமதுநிருபரிடம் தெரிவித்தார். பருத்தித்துறை பிரபல வழக்கறிஞர் திரு எஸ். ஜெயசிங்கம் எமது நிருபரிடம் கூறியதாவது.

முதலாளித்துவத்தை முறியடிப்பதென்பது ஒன்று சோஷலிஸத்தைக் கட்டி வளர்ப்பது வேறுவிடயம். இரு கருமங்களையும் ஒரே வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் திருப்திகரமாகச் செய்யமுடியாது ஆனால் புதிய வரவுசெலவுத்திட்டம் இதுவரை நமக்குக் கிடைத்தவற்றிலும்பார்க்க ஒரு தனித் தன்மைவாய்ந்தது.

## கமக்காரரிடம் பொறுப்பு

கொழும்பு, வெள்ளி

வவனியா தண்ணிமுறிப்புக் குடியேற்றத்திட்ட நீர்ப்பாசனம் செய்யும் பொறுப்பை குடியேற்றத் திட்டத்திலுள்ள விவசாயிகளே செய்ய வேண்டும் என்ற பொறுப்பை வவனியா அரசாங்க அதிபர் நேற்று வழங்கினர்.

2600 ஏக்கர் நிலத்திற்கு இங்கு நீர்ப்பாசனவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது இங்கு பெருந்தொகையாக தமிழரே வசிக்கின்றனர்

முன்னர் அரசாங்கத்தால் செய்யப்பட்டுவந்த நீர்ப்பாசன வேலைகளையும், வாய்க்கால் கண்காணிப்புகளையும் ஏனைய வேலைகளையும் கமக்காரரின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. (சி பி ஏ)

தமது கைப்பட எழுதிய உருக்கமான கடிதத்தில் 'நாம் வறுமையின்கொடுமையை தாங்கமுடியாமல் நஞ்சருந்தி தற்கொலை செய்கிறோம்' என்று எழுதப்பட்டிருந்தது

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

## இங்கிலாந்து சென்றனர்

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடியைச் சேர்ந்த திரு. தம்பையா பாலகிருஷ்ணன், திரு. செல்லையா பாலசுப்பிரமணியம் ஆகிய இருவாலிபர்களும் நெசவுத் தொழில் நுட்ப வியலில் உயர்பயிற்சி பெறுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளனர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் பழைய மாணவர்களான இவர்களிருவரும் போல்டன் கலாசாலையில் பயிற்சி பெறுவர்.

······

## றிமாண்டில்

வல்வெட்டித்துறை, வெள்ளி

சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பிஐயா ஆனந்தன் என்பவர் தனது மனைவிக்கு ஜீவனாம்சப்பணம் கட்டாமலும் குறிப்பிட்ட தவணைக்கு கோர்ட்டிற்கு சமுகமளிக்கத் தவறிய குற்றத்திற்காக அவர் மீது சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா வாரண்ட் பிறப்பித்திருந்தார். எதிரி பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு செருடாவில் சைக்கிள் பறி முதல் வழக்கொன்றிற்கு சாட்சியமளிக்கவந்த சமயம் எதிரியை பருத்தித்துறைப் பொலிஸார் கோர்ட்டு வளவுக்குள்வைத்துகைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளனர்.

## 75,968 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை

கோட்டை, வெள்ளி

1954-ம் ஆண்டு செய்யப்பட்ட இலங்கை இந்தியஒப்பந்தத்தின்படி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதிவரை இந்திய அரசாங்கம் 75,968 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கியுள்ளது. இத் தொகையில் 17,595 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

## அனுப்புங்கள்'

ஊரதீவு, வெள்ளி

'எமதுகிராமத்திலேஇருக்கின்ற சிறார்கள் சக இனத்தவர்களின் மொழியானசிங்களத்தைப் படித்து தேர்ச்சி பெறவேண்டுமென நாம் விரும்புகிறோம் எமது குழந்தைகளின் கல்விச்செல்வத்துக்குஒளியூட்டக்கூடியவகையில், தமிழ் தெரிந்த சிங்கள ஆசிரியர்களை எமது கிராமத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்'

இவ்வாறுபுங்குடுதீவுகல்வி வளர்ச்சிக்கழகத்தினர் கல்வி அமைச்சருக்கு விடுத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

## வடக்கில் சோவியத் நட்புறவுச் சங்க கிளைகள்

மாவிட்டபுரம், செவ்.

சோவியத் நட்புறவுச்சங்க கிளைகளை வடக்கில் சகல இடங்களிலும் அமைத்து சோவியத் கொள்கைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதென யாழ் சோவியத் நட்புறவுச் சங்கத்தின் செயற்குழுக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

மேற்படி கூட்டம் யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தில் வழக்கறிஞர் எஸ். ஆனந்தக்குமாரசாமி தலைமையில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

சோவியத் நட்புறவுச்சங்க புரட்சிதினம் நவம்பரில் நடக்கும்போது அதில் கலந்துகொள்ளும்படி, தபால் அமைச்சர் செ. குமாரசூரியர், கடற்றொழில் அமைச்சர் திரு ஜோர்ஜ் ராஜபக்சா ஆகியோரை அழைத்தல்உட்படப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சிலம்பொலி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நாளை மாலைமாவிட்டபுரம் ப நோ. கூ. சங்க முன்றலில் சிலம்பொலி மாத இதழ் வெளியீட்டுவிழா நடைபெறவிருக்கிறது.

திரு த. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் புலவர் ம. பார்வதிநாதசிவம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திரு மு. வைரவப்பிள்ளை உட்படப் பலர் ஆய்வுரை நிகழ்த்தவிருக்கின்றனர்

மாவைக்கம்பன் கலைக்கழகம் இச் சஞ்சிகையை வெளியிடுகிறது.

மாவிட்டபுரம், வெள்ளி

ஆனைக்கோட்டையில் சென்றவாரம் நடைபெற்ற திருட்டுக்கள் சம்பந்தமாக பொருட்களுடன் ஒருபள்ளி மாணவன் கைதாகியுள்ளார்

இவரின் வீட்டில் சோதனையிடப்பட்டபோது 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சேலை, சங்கிலிகள் ஆகியன கைப்பற்றப்பட்டனவாம். இது குறித்து மேலும் பொலிசார் தீவிரவிசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## பேதி நோய்

அம்பன், வெள்ளி

இப்பகுதியிலுள்ள பெரும்பாலான குழந்தைகள் பேதி நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். பேதி நோய் பெரும்பாலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கே தொற்றிவருவதாகவும் இந்நோயுள்ள குழந்தைகளின் குடலில் ஒருவித கிருமி வளர்ந்து வருவதாலேயே வயிற்றோட்டம் தொடர்ந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## உபதபாலதிபர்கள் தொழிற்சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் தொழிற்சங்க எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பு தலைமை அலுவலக கட்டிடத்தின் 7-வது மாடியில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. எ. இராசலிங்கம் சாஸ்த்திரி (கூளாங்குளம்) தலைவர்: திரு. வே. சுதிராமத்தம்பி (கல்லடி உப்போடை) உபதலைவர்கள் திரு. எ. எம். அகமதுலெவ்வை (புதுப்பள்ளியடி) திரு. சி சேனாதிராசா (முரசுமோட்டை) திரு. மு சிவப்பிரகாசம் (செட்டிகுளம்) பொதுச்செயலாளர் திரு. ஐ. நடராசா (அனலைதீவு) 7 வது வடரும் ஏகமனதாகத் தெரியப்பட்டார். உதவிச்செயலாளர் சி, இரத்தினசபாபதி (அல்லைப்பிட்டி) பொருளாளர்; திரு. எ. சென்ட்ஜோ வாஷிங்டன்)

திருவாளர்கள் க. சிவஸ்கந்தா, க இராசலிங்கம், க. சந்திரசேகரம் எஸ். தங்கராசா, ஏச். உமறுலெப்பை, எம். இராசநாயகம், ஏ சின்னையாப்பு எஸ், சிவானந்தம் ஆகியோர் நிர்வாகஉறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர்.

அன்பளிப்புகள் வழங்கப் பட்டன.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 14-ந் திகதி

(31-10-70)

மேஷம்- இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்து தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்குப் பெருகும்.

ரிஷபம்- தொல்லைகள் அலைமோதும். மன நிம்மதியைத் தேடி அலைவீர்கள். குடும்பத்திலும் சிறு பிணிக்கு இடமேற்படலாம்

மிதுனம்- திருப்திகரமான திருப்பத்துக்கு இடமுண்டு. விருந்தினர்களின் வருகைக்கும் உறவினர்களின் ஆதரவுக்கும் இடமேற்படும்.

கடகம்- தொழில்துறையில் புதிய உத்வேகம் காணப்படும் எந்த நிலைமையையும் கட்டுப்படுத்துவதில் தனிப்புகழ் அடைவீர்கள்,

சிம்மம்- செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள்.

கன்னி- நத்தைவேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும் மனத் தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

துலாம்- ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடம் இருந்து அகப்பட்டதை சுருட்டுவதற்கு சிலர் முனைவார்கள்.

விருட்சிகம்- மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் நீண்ட நாள் பிணி நீங்குவதற்கு இடமுண்டு.

தனுசு- ஆணவப் போக்கினால் அடி சறுக்கநேரிடும். குடும்பத்தில் சிறிய பூசலுக்கும் இடம் ஏற்படலாம். அடக்கம் நன்று.

மகரம்- மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் மாதுருவழியால் தனவரவுக்கும் இடமுண்டு சுபதினம்,

கும்பம்- இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். பிரிந்தவர் கூடுவர். வேற்றுமைகள் மறையும்.

மீனம்- ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி வடுவதற்குச் சிலர் திட்டம் போடுவார்கள். தனிமை நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## விபரம் கோருகிறார் பண்டிதர்

கோட்டே, வெள்ளி

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு சஞ்சிகைகள் பத்திரிகைகள் பற்றி ஆட்சிமன்றத்தில் கேள்வியொன்றை கேட்பதற்கு தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா பொ இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சரிடம் கேட்கப்படவிருக்கும் அக் கேள்வியில்: எந்த எந்த நாட்டில் இருந்து எவை எவை எவ்வளவு பிரதிகள் இப்பொழுது இறக்குமதியாக்கப்படுகின்றன? இவற்றில் குறிக்கப்பட்டுள்ள விலைகள் யாவை? இவற்றை இறக்குமதி செய்வதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் சென்ற நிதி ஆண்டில் அனுப்பப்பட்ட பணம் தனித்தனி எவ்வளவு?

(அ) ஆங்கில மொழியிலும் (ஆ) தமிழ்மொழியிலும், (இ) பிறமொழிகளிலுமுள்ளனவற்றின்தொகையும் இறைறுக்காக பிறநாடுகளுக்கு சென்ற நிதிஆண்டில் அனுப்பப்பட்ட பணமும் எவ்வளவு? என்ற விபரங்களை திரு. இரத்தினம் கோருவார்.

இலங்கையில்தமிழ்மொழி பேசுவோர் ஆங்கிலம் படித்தோர் பிறமொழி தெரிந்தோர் ஆகியவர்களின் எண்ணிக்கைகளைத் தனித்தனியாகத் தரும்படி திரு. இரத்தினம் பிரதமரிடம் கேட்கவிருக்கிறார்.

# 'பொதுமக்கள்பொதுநோக்கு உடையவர்களாக வேண்டும்'

அம்பன், வெள்ளி

''அறிவென்பது வளரும் பயிர். கல்வி என்பது அறிவென்ற பயிரை வளர்க்கும் நீர். பயிருக்கு நீர் எவ்வளவு முக்கியமோ ஆதேபோன்றுதான் மாணவ சமுதாயத்துக்கும் கல்வியறிவு எவ்வளவு முக்கியமென்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது, ஆசிரியர்கள் எவ்வளவு முயற்சி எடுத்து கல்வி புகட்டுகின்றார்களோ அவ்வளவுக்கு மாணவர்களின் கல்வி அறிவும், வாழ்வும் பிரகாசிக்கக் கூடியதாக அமையுமென்பதில் சிறிதேனும் ஐயமில்லை,''

அம்பன் அரசினர் தமிழ்க கலவன் பாடசாலையின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலே பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கே. துரைரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி திறப்புவிழா வைபவத்தில் கலந்து கொண்ட வடமராட்சி வடக்கு கிழக்குக் காரியாதிகாரி திரு மு. தம்பிமுத்து பேசுகையில் தெரிவித்ததாவது:

''பொதுமக்கள் பொது நோக்கில் அக்கறையுடையவர்களாக இருப்பார்களேயானால் நாடு ஒருபோதும் பின்தங்கமாட்டாது. இந்தப் பாடசாலையின் புதிய கட்டடிடத்திற்கு இவ்வூர்ப் பொதுமக்கள் ஆற்றிய அரியசேவையும் பேருதவியும் பிற்காலச் சந்ததியினருக்கு ஆற்றிய பெருந்தொண்டாகும். இவ்வாறான நன்மனமும், நன்நோக்கும் மக்களிடையில் வளருமேயானால் நாடு அபிவிருத்தி அடைவதற்கு ஒருவித தடையுமிருக்காது.''

வடமராட்சிப்பகுதி வட்டார வித்தியாதரிசி கே. நவரட்ணம், வி. பாலசுந்தரம் உட்படப் பலர் இவ் விழாவில் உரையாற்றினர்.

······

## வைரவிழா

மாவிட்டபுரம், வெள்ளி

100 வருடங்களாக நாட்டுக்குகந்த நல்மாணவர்களை உருவாக்கிய வட்டுக்கோட்டைக் கார்த்திகேய வித்தியாசாலை வைரவிழா சிறந்த முறையில் நடாத்துவதென மேற்படி வித்தியாசாலையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது

வைர விழா நடாத்துவது பற்றி ஆராய வித்தியாலய அதிபர் தி. கந்தசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

வைரவிழா நிர்வாக சபையினராகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் திரு, செ. கந்தசாமி. உப தலைவர் திரு. செ. இரத்தினசாமி, திரு. சி நடராசா, இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் த சிதம்பரநாதன், இ. ஆனந்தராசா, பொருளாளர்கள் திருவாளர்கள் தில்லைநாதன் பொ தாமோரம்பிள்ளை, வ அமிர்தலிங்கம், சி. தவராசா ஆ. சண்முகநாதன், க சின்னையா,ச. சின்னையா வே. சிவரத்தினம், வ கந்தையா, ச. கதிரவேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வாழ்வில் இன்பம் என்பது உன் நிழலைப் போன்றது. நீ நின்ருல் அதுவும் நின்றுவிடும்- நீ அதைக் கடக்கவிரும்பினுல் அதுவும் அசைய ஆரம்பிக்கும்'
—முசப்மது.

ஈழநாடு
"Eelanadu National Daily"
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம்
14-ந் திகதி (31-10-70)

## பொதுமக்கள் தொல்லை

ஆயிரம் ரூபாய் வரையில் பழைய ஐம்பது, நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து புதிய ஐம்பது நூறு ரூபாய் நோட்டுக்களாக மாற்றிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் வழங்கியிருந்த சலுகையைச் சிலர் துஷ்ப்பிரயோகம் செய்து வருவதால் நூறு ரூபாய் வரைதான் நோட்டுக்கள் மாற்றலாம் என்று நேற்று முதல் அறிவிக்கப்பட்டிருக்கிறது பணத்தைப் பெருமளவில் பதுக்கிவைத்தவர்கள் தங்கள் நோட்டுக்களை மாற்றுவதற்கு ஆட்களை வைத்து மாற்றுவதாகவும் இந்த மோசடியைத் தடுப்பதற்கே ஆயிரம் ரூபாய் வரை பழைய நோட்டுக்களுக்குப் பதிலாகப் புது நோட்டுக்கள் கொடுத்துவந்ததை நூறு ரூபாயாய் குறைக்க நேரிட்டதென்று அரசாங்கம் விளக்கம் கூறுகிறது

பதுக்கல்பேர்வழிகளின் மோசடி காரணமாக ஏழை எளிய அப்பாவி மக்கள்தான் அதிக தொல்லைகளுக்குள்ளாகித் துன்பப்படுகிருர்கள். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தீபாவளிப் பண்டிகைச் சமயத்தில் ரூபாய் நோட்டுப் பிரச்னை வந்து தீபாவளியையே கலகலப்பில்லாமல் செய்துவிட்டது. ஒரே ஒரு ஐம்பது ரூபாய்த் தாளை மாற்றுவதற்கும் ஒரே ஒரு நூறு ரூபாய்த் தாளை மாற்றுவதற்கும் மணிக்கணக்கில் வங்கிகளின் முன்னுல் கியூவில் நிற்கும் ஆண்களும் பெண்களும் பட்ட அவதியை சென்ற சில தினங்களில் காணக்கூடியதாக இருந்தது.

வங்கிகள் இல்லாத நெடுந்தீவு போன்ற பிரயாணக் கஷ்டமுள்ள இடங்களில் நடமாடும் வங்கிகள் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசதியைச் செய்துகொடுத்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபரையும் மற்றும் அதிகாரிகளையும் பாராட்டவேண்டும்.

இதேசமயம் காரியாதிகாரி போன்ற பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மூலம் அந்தந்தப் பகுதி மக்களைப் பற்றி நன்கு அறிந்த கிராமசேவையாளர்களின் உதவியுடன் புதிய நோட்டுக்களை பழைய நோட்டுக்களுக்கு மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்வதும் அப்பாவிப் பொதுமக்களின் கஷ்டத்தைக் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

இதேசமயம் இதுவரை ஏழை எளிய மக்களின் கண்ணிலேயே படவிடாமல் பணத்தைப் பதுக்கிவைத்த பதுக்கல் பேர்வழிகளுக்காகப் பணத்தை மாற்றிக் கொடுக்கப் பொதுமக்களும் முன்வர மறுத்தால் அப்பாவி மக்களின் தொல்லையும் குறையும்; மோசடிக்கும் இடமிருக்காது.

## வரவும் செலவும்

''வரவு எட்டணு, செலவுபத்தணு...' என்று வேடிக்கைப் படப்பாட்டு ஒன்றுண்டு. வரவைவிட செலவு அதிகமாயின் அவ்வாழ்க்கை எப்படி மோசமாக இருக்கும் என்று சித்தரிக்கிறது அப்பாட்டு

நமது அரசாங்கத்துக்கு அடுத்த ஆண்டில் வரவு 252 கோடி ரூபாயும் செலவு 420 கோடிரூபாயுமாகுமென்று நமது நிதி அமைச்சர் கணக்குப் ... என்பது பற்றி பலருக்கும் யோசனை. செல்வமுள்ளவர்களுக்கு ஏன் இந்தச் செல்வமுள்ளது என்றும், செல்வமே இல்லாதவர்களுக்கு அதிக நிம்மதியும் இருப்பதைப் பார்க்கிருேம்,

''பணமே! உன்னுல் என்ன நலமே'' என்று ஒரு பாட்டுண்டு. அதன் உண்மையை செல்வந்தர்கள் அதிகமாக உணர்ந்து வருகின்றனர். பணத்துக்கும் பணக்காரருக் ...

பண்டாரவன்னியன் நினைவு விழா சிறப்பிதழ்

# உயிர் பிரியும் வரை அந்நியர் ஆட்சியை எதிர்த்த மாவீரன் பண்டாரவன்னியன்!

கவிஞர் முருகசூரியன்

எழில் வளம் தவழும் ஈழநாட்டில் வளம் நிறைந்த நாடு வன்னி நாடு. அது நல்ல நாடு.

''வளமார் குளம் பொலிந்த வன்னி நாடே'' என்ற பழம் பெரும் வாக்கியத்துக்கு ஒப்ப. ''ஈழத்தின் தானியக் களஞ்சியம்'' என்ற அழியாப் பெயர் பெற்ற இந்நாடு, இயற்கை அன்னையின் ஒரு தனிப் பெருங் கொடையேயாம். கண்ணுக் கெட்டியதூரம் வரை பச்சைப்பசேல் என்ற தோற்றம் திரும்பும் திசை தொறும் நீர் நிலைவாவிகள்; குளங்கள். இத்துணைச் சிறப்புடை நாட்டின்கண், தத்தம் கற்பனைக் குதிரைகளைப் பறக்கவிட்ட புலவர்கள் பலர். கற்பனைக் குதிரையின் சிந்தனைத்திறனில் எழுந்த புகழ் மலிந்த கவிதைகளோ பலப்பல.

நீர்வளமும், நிலவளமும் நிறைய அதன்மூலம் மக்கள் சிறப்படைந்து வாழும் இந்நாட்டில் செங்கோலாட்சி நடைபெற்றது என்பது வெள்ளிடைமலை.

செங்கோல் ஆட்சியைச் செலுத்திய மன்னனும் அழியாப் புகழுடையவனுகத்தான் இருந்திருக்க வேண்டும். அக்காலத்து ''அடங்காப் பற்றின்'' காவலன்— இயற்கை அன்னையின் எழிலெல்லாம் வழிந்தோடும் வன்னிநாட்டின் சுதந்திரத்தைக் காத்தவன் — உயிர் பிரியும் வரை அந்நியர் ஆட்சியை எதிர்த்தவன் என்றெல்லாம் அழைக்கப்பெற்ற மாவீர மன்னன் பண்டாரவன்னியன், வன்னி நாட்டு இறுதி அரசனுக ஆண்டுவந்தான். அந்நாளில் இலங்கையின் கரையோரம் சிறிது சிறிதாக அந்நியர் கைவசமானது. கரையோரங்களைத் தம் வசப்படுத்திய அந்நியர், வன்னிநாட்டைத் தம் வசப்படுத்த முடியாது ...

... டேற் சுதந்திரம்; இன்றேல் வீரசுவர்க்கம்'' என்று திண்டோள் வீரன் பண்டாரவன்னியன் விடுத்த பதில் காரணமாகப் போர் முரசங்கள் ஒலித்தன. ''பெக்''கின் படைகள் தலை குனிந்து ஓடியது, கோட்டை தகர்ந்தது 'பெக்' துரத்தப் பெற்ருன். துரத்தப்பெற்ற படைகள் மீண்டும் தலைதூக்கின மும்முனை எதிர்ப்பை வேலாலும் வாளாலும் எதிர்க்க முடியவில்லை பண்டாரவன்னியனுல். இறுதிப் போர் கற்சிலை மடுவில் நடைபெற்றது. நாள்களும் பலவாயின போர்முடிந்த பாடேயில்லை. வாள்வீச்சு ஓயவில்லை. வேல் தாக்குக் குறையவில்லை. வீராவேசகோசம் குன்றவேயில்லை.

இறுதி வீரன், இறுதி வீரம் இறுதி மூச்சு, இறுதி வாள்.

இறுதித்துளி இரத்தம் இருக்கும்வரை எதிர்ப்பு நிலைத்தது. ஈற்றில் தன்னந்தனி வீரஞக தியாகியாக நின்று போராடினுன் அந்நியரின் குண்டுகள் அவன் உடலை உருசிபார்த்தனவே தவிர உயிரை குடிக்கமுடியவில்லை குருதி வடியச் சோர்வு உற்றிருந்த மாவீரன் பண்டாரவன்னியனுக்கு அருகே அவனது குதிரை. வன்னியனிடம் பகைவரை அண்டவிடாது தடுத்துக் காத்திருந்தது. குதிரைக்குப் பயந்த 'பெக்' மாவீரனை வலைவீசிப்பிடித்து விலங்கிலிட்டுப் 'பனங்காமம்' கொண்டுசென்ருன்.

இலங்கையருக்காக இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் இனத்துக்காக சுதந்திரத்துக்காக எதிர்த்துப் போராடிய தன்னிகரற்ற வீரன் பண்டார வன்னியன்!

மங்கி மறைந்து சிதறிப் பரந்து கிடக்கும்வன்னிநாட்டிறு மன்னனின் சரித்திர வரலாறுகளை ஆராய்ந்து அறிந்து ஈழத்து சரித்திர ஏட்டிலே இடம்பெறச் செய்யவேண்டும் என்ற பெருநோக்குடன் அம்மன்னனின் நினைவுதின விழாவைக் கொண்டாட முன்வந்த பண்டாரவன்னியன் கழகத்தலைவர் திரு வே. சுப்பிரமணியம் 'முல்லைமணி' அவர்களும் போஷகர் உயர்திரு. தா. சிவசிதம்பரம் அவர்களும் செய்யும் பணி போற்றற்குரிய பணியாகும்.

ஓங்குக பண்டார வன்னியன் புகழ்!

# மாவீரன் வாழ்க்கையில் சில சுவையான சம்பவங்கள்!

"முல்லைமணி" வே. சுப்பிரமணியம்
(தலைவர், பண்டாரவன்னியன் கழகம்)

1803-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையைத் தாக்கினுன். கப்டன் டிறிபேக்கின் தலைமையில் போர் செய்த படை பின் வாங்கி ஓடநேர்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைக்கப்பட்ட வள்ளங்களின் உதவியுடன் கப்டன் டிறிபேக் முல்லைத்தீவை விட்டகன்ருன்.

திருகோணமலையிலிருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் வந்த படை மீண்டும் முல்லைத்தீவுக்கோட்டையைக் கைப்பற்றியது. பண்டாரவன்னியனும் அவனது படைவீரரும் கோட்டையி... படையினரால் கைப்பற்றப்பட்டது ஐம்பத்தைந்து ஆயுதம்தாங்கிகளும் பன்னிரண்டு ஈட்டிகளும், இரண்டு வாள்களும் இரண்டு கிறீஸ்களும் ஒரு பீப்பாவும் இரண்டு கூடை நிரம்பிய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. பண்டாரவன்னியனது உடைமைகள் நிரம்பிய 43 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

1803-ல் தோற்கடிக்கப்பட்டபோதும் அவனது வீரர்கள் சிதறுண்டபோதும் வன்னிமன்னனுக மீண்டும் வரவேண்டுமென்ற எண்ணத்தைப் பண்டாரவன்னியன் கைவிடவில்லை. ஏழு ஆண்டுகளாகப் பண்டாரவன்னி... பிடிக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. வவனியாவிலும் வெடிவைத்த கல்லிலும் காவல் போடப்பட்டது. இவ்வூர்கள் கண்டி இராச்சியத்தின் எல்லைகளாக அமைந்தன.

1810-ம் ஆண்டு செப்டம்பரில் பண்டாரவன்னியன் கண்டித் திசாவைகளின் உதவியுடன் மீண்டும் வன்னியைத் தாக்கவிருப்பதாக வன்னிப் பகுதிக்கலெக்டர் ரேணருக்கு மேர்பற்று கிழக்கு முதலியார் கதிர்காம நாயகரிடமிருந்து செய்திகிடைத்தது.

இதையடுத்து வன்னி நாட்டைக் காவல்புரிய மேலும் நூறு படை வீர...

# அன்றும் இன்றும் என்றும் வாழ்க!

— வன்னியூர்க் கவிராயர் —

'துணிவொன்றே தக்கதுணை பானிடர்க்குச்
'சுதந்திரமே பிறப்புரிமை' வாழ்ந்தால் யாரும்
துணிவாய்த் தன்மானமொடு வாழவேண்டும்
துஞ்சியஞ்சிக் கோழைகளா யடிமைப் பட்டுப்
பணிந்துவாழ்ந் திடுதலினும் சாவதேமேல்
பலன்பயக்கு மிம்மொழிகட் கோர் சான்ருகத்
தணியாத சுதந்திரநல் வீரனுகத்
தான்மடிந்த பண்டார வன்யன் வாழ்க

வீரத்தின் விளைநிலமாய் வன்னிநாட்டின்
விடிவெள்ளி யாய்(ச்) சிந்தை செயலில் பேச்சில்
வீரஉணர் வேமிளிர வாழ்வின் எல்லை
வேளைவரை இலட்சியத்திற் சோர்வுருது.
வீரத்திற் கிலக்கணமாய் வாழ்ந்தே ஆவி
விட்டிடுபண் டாரவன்னி யன்தனக்கு
வீரவணக் கஞ்செலுத்தி நெஞ்சத்தில் அவ்
வீரனையே சிலையாக்கி தொழுது வாழ்வாம்

ஆண்டாயிரத்துடன் எண்ணூற்று மூன்றின்
அக்டோபர் மதிமுப்பத தோராந் தேதி
மூண்டெழுந்து திருமலை, மன் ஞர்யாழ்ப்பாணம்
மும்முனையால் வருபகைஞர் வலிமைகண்டும்
பூண்டுடனச் சங்களைந்து எதிர்த்து நின்று
புனிதப்போர் ஈட்டியதால் தோல்வியுற் (று) என்?
ஆண்டாண்டாய் அன்றும் இன்றும் என்றும் வீரன்
ஆகப்பண் டாரவன்னி யன் வாழ்வானே!

### யாழ். வங்கியில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் 1மணியுடன் லேபல்களும் பத்திரங்களும் முடிவடைந்ததால் நூற்றுக்கணக்கான மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். நேற்றுக்காலை தபால்கந்தோர் சேமிப்பு வங்கியில் பணம் போடுவதற்கு ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள மற்றும் உப தபால் நிலையங்களிலும் லேபல்கள் முடிந்துவிட்டதாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்று தங்கப்பவுணின் விலை 190 ரூபாவாக உயர்திருந்தது.

சில நகைக்கடைகள் மூடப்பட்டிருந்தன. எந்த நகைக் கடையிலும் பழைய 100ரூபா 50 ரூபா நோட்டுக்களுக்கு ஓடர் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே பழைய நோட்டுக்கள் பெற்று எடுக்கப்பட்ட ஓடர்கள் ரத்துச் செய்யப்பட்டு உரியவர்களுக்கு பணம் பழைய நோட்டுக்களாகவே திருப்பிக் கொடுக்கப்பட்டன. நேற்று நகைக்கடைகளிலும் பழைய நோட்டுக்கள் வாங்க மறுத்து விட்டனர்.

ஆசிரியர்கள் சம்பளமாகப் பெற்ற பழைய 50 ரூபா 100ரூபா நோட்டுக்களை ...

### பல்லாயிரம்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து சோதனையிடப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. வல்வெட்டித்துறையிலும் பெரிய புள்ளிகள் சிலரது வீடுகள் சோதனையிடப்பட்டன.

#### நடமாடும் வங்கி

நெடுந்தீவு, நயினுதீவு, துணுக்காய் போன்ற பகுதிகளுக்கு நாளை முதல் பழைய 100, 50 ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்கு வசதியாக 'நடமாடும் வங்கிகள்' ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வடபகுதி அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

#### கூப்பன் சோதனை

ஏழைகளின் பங்கீட்டரிசிப் புத்தகத்தை பணம் கொடுத்து வாங்கி ஆள்மாருட்டம் நடாத்தி பதுக்கல் காரர் மோசடி நடாத்துவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும். பொலிசார் 'கியூ'வில் நிற்பவர்களை திடீர் விசாரணைக்குள்ளாக்கி கூப்பன் புத்தகத்தில் மோசடி செய்திருப்பதாக கண்டுபிடித்தால் கடும் தண்டனைக்குள்ளாவார்களென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாட்டு

நமது அரசாங்கத்துக்கு அடுத்த ஆண்டில் வரவு 252 கோடி ரூபாயும் செலவு 420 கோடி ரூபாயுமாகுமென்று நமது நிதி அமைச்சர் கணக்குப் போட்டுள்ளார். அதாவது வரவைவிட அதிகச் செலவு ரூபா 168 கோடி ஆகுமாம்.

''ஆன முதலில் அதிகம் செலவானால், மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை எல்லார்க்கும் பொல்லனாய் ஏழ் பிறப்பும் தீயனாய் நல்லார்க்கும் பொல்லனாம் நாடு'' என்பது மூதுரை. 'கடன்பட்டான் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்'' என்பது கம்ப நாட்டார் வாக்கு. ஆனால் இவ்வளவு கோடிகள் அதிக செலவாயினும் இலங்கை நிதி அமைச்சரோ பிரதமரோ மகா தேசாதிபதியோ கலங்கத் தேவையில்லை, இது ஜனநாயகம் அதனால் எவ்வளவு பளுவானாலும் தாங்கிக் கொள்ளத்தான் பொது மக்கள் இருக்கிறார்களே!

துண்டுவிழும் பணத்தைச் சரிக்கட்ட நிதி அமைச்சர் எடுத்துள்ள நடவடிக்கைகள் நம்மை எப்படிப் பாதிக்குமோ

''பணமே! உன்னால் என்ன நலமே'' என்று ஒரு பாட்டுண்டு. அதன் உண்மையை செல்வந்தர்கள் அதிகமாக உணர்ந்து வருகின்றனர். பணத்துக்கும் பணக்காரருக்கும் இச்சோஷலிச ஆட்சியில் இனி மதிப்பில்லை. இதற்கு மாறாக அவர்களுக்குப் பணத்தால் தொல்லைப் படவேண்டிய அவசியமின்றி செய்து விடுவதாக இருக்கும்.

மனிதருக்குச் சாதாரணமாக 'அன்ன விசாரம் அதுவே விசாரம் அது ஒழிந்தால் சுவர்ண விசாரம் அது தொலையா விசாரம்'' என்பார்கள். நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டத்தின் பயனாக ஈழத்து மக்களுக்குப் பண ஆசை தானாகக் குறையக்கூடும். பணம் ஓர் இடத்தில் தேங்கினால் தானே பொருளாதார நலன் ஏற்படும்.

இருகொத்து அரிசி வாரத்துக்குக் கிடைப்பதால் அன்ன விசாரமும் நமக்கு அநேகமாக இருக்கத் தேவையில்லை. இவ்விரு விசாரங்களும் நீங்குவதாயின் புதிய வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவு துண்டுவிழுந்தாலும் நமக்கென்ன கவலை?

[illegible] தான். அந்நாளில் இலங்கையின் கரையோரம் சிறிது சிறிதாக அந்நியர் கைவசமானது. கரையோரங்களைத் தம் வசப்படுத்திய அந்நியர், வன்னிநாட்டைத் தம் வசப்படுத்த முடியாது தவித்த காலம். ஆட்சி வெறி பிடித்த பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் கப்பற் பீரங்கிகள் கதறிய காலம். நல்ல யுத்த உபகரணங்கள் மலிந்து பொலிய அணியணியாக நின்று அந்நியர் எம்மை அரண் கொண்ட காலம். கோட்டைகள் தோறும் வெள்ளையர்களின் கொடிகள் பறந்தன. எல்லாவற்றையும் தம்வயப் படுத்திய ஆங்கிலேயரின் கவனம் எவருக்கும் அடங்காது, அடங்காப் பற்றுடன் வீரவாட்சி செலுத்திய வன்னியன் மீது திரும்பியது.

வன்னி நாட்டில் எண்திசைகளிலும் பகைவனை எதிர்க்கப் படைகள் தயாராயின. பண்டார வன்னியனின் வரவாள் பொறித்த கொடிகள் பட்டொளி வீசிப்பறந்தன பண்டாரவன்னியனின் படை அணிகளும் தயாராயின.

அந்நியப்படையின் தளபதி ''வொன்ட்றிபேர்க்'' தனது ஆணையை ஏற்றுத் திறை செலுத்துமாறு பண்டார வன்னியனுக்குக் கட்டளை பிறப்பித்தான். ''உண்[illegible]

[illegible]டகன்றுன்.

திருகோணமலையிலிருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் வந்த படை மீண்டும் முல்லைத்தீவுக்கோட்டையைக் கைப்பற்றியது. பண்[டா]ரவன்னியனும் அவனது படைவீரரும் கோட்டையிலிருந்த மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்றனர்.

பண்டாரவன்னியனுக்கு உதவிபுரிந்தமைக்காக இராசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு முல்லைத்தீவைச் சேர்ந்த குமாரசேகர முதலியாரும் வேறுபலரும் தூக்கிலிடப்பட்டனர். தூக்கிலிடப் பட்ட இடம் இன்றும் தூக்கு மரத்தடி என அழைக்கப்படுகின்றது

மன்னாரிலிருந்து கப்டன் டிறிபேக்கின் தலைமையில் வந்தபடை கற்சிலைமடு என்னுமிடத்தில் பண்டாரவன்னியன் படைகளை எதிர்பாராதவிதமாகத் தாக்கியது. 1803 அக்டோபர் 31-ம் நாள் அதிகாலை 5 மணிக்கு இந்த யுத்தம் நடைபெற்றது. இதில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான். யுத்தத்தில் ஏராளமான படைவீரர்கள் இறந்தனர். 49 வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர். கண்டிப் பீரங்கி ஒன்றும் ஆங்கிலப்

1803-ல் தோற்கடிக்கப் பட்டபோதும் அவனது வீரர்கள் சிதறுண்டபோதும் வன்னிமன்னனாக மீண்டும் வரவேண்டுமென்ற எண்ணத்தைப் பண்டாரவன்னியன் கைவிடவில்லை. ஏழு ஆண்டுகளாகப் பண்டாரவன்னியன் பிரித்தானியருக்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. 1810-ம் ஆண்டு மே மாதம் கண்டி மன்னனது பிரஜைகள் சிலரின் உதவியுடன் உடையாரூரில் தனது எதிர்ப்பைத் தெரிவித்தான். வவனியாவுக்கு அண்மையிலுள்ள கிராமமொன்றைக்கொள்ளையடித்ததாக ஆங்கில அறிக்கைகள் கூறுகின்றன.

பண்டாரவன்னியன் படையில் 14 வீரரே இருந்தனர். ஒரு வாளும் நாலு கிரீசும், இரண்டு பெரிய கத்திகளுமே அவனுடைய ஆயுதங்கள் எனினும் இவனது படையெடுப்புபிரித்தானியரை நிலைகலங்கச் செய்தது. பண்டாரவன்னியன் படையெடுப்பைத் தொடர்ந்து கரையோரப் பகுதிகளைக் காப்பாற்ற யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படை அனுப்பப்பட்டது. பண்டாரவன்னியனைப்

வன்னிப் பகுதிக்கலெக்டர் ரேனருக்கு மேர்பற்று கிழக்கு முதலியார் கதிர்காம நாயகரிடமிருந்து செய்திகி[டைத்த]து.

இதையடுத்து வன்னி நாட்டைக் காவல்புரிய மேலும் நூறு படை வீரரையும் இரண்டு பீரங்கிகளையும் அனுப்புமாறு மேஜர் ஹென்றிக்கு விண்ணப்பம்செய்யப்பட்டது. வவனியா விளாங்குளத்தில் இருந்த காவல் முகாமைப் பலப்படுத்தவே இம்முயற்சி செய்யப்பட்டது. இதே போலவே திருகோணமலையிலிருந்தும் லெப்டினன்ட் ரெயிட்தலைமையில் ஒருபடை அனுப்பப்பட்டது.

1810 நவம்பரில் கிழக்கு மூலை தெற்கில் நேர்ந்த குழப்பங்களுக்குக் காரணம் பண்டாரவன்னியனே எனக் கலெக்டர் மேலிடத்திற்குத் தெரிவித்தார்.

1811-ம் ஆண்டு உடையாரூரில் நடைபெற்ற போரில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான். போரில் படுகாயமுற்ற வன்னிமா வீரனை அவனது படைவீரர் தூக்கிச் சென்றனர். அடுத்த நாளே அவன் பனங்காமத்தில் உயிர்நீத்தான்.

திருப்பிக் கொடுக்கப்பட்டன. நேற்று நகைக்கடைகளிலும் பழைய நோட்டுக்கள் வாங்க மறுத்து விட்டனர்.

ஆசிரியர்கள் சம்பளமாகப் பெற்ற பழைய 50 ரூபா 100ரூபா நோட்டுக்களை மாற்றுவதற்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் சில ஒழுங்குகளை செய்திருக்கிறது.

ஆஸ்பத்திரி ஊழியர்களும், அரசாங்க ஊழியர்களும் சம்பளமாகப் பெற்ற பழைய நோட்டுக்களை மாற்றுதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தகவல் கிடைத்திருப்பதாகவும். பொலிசார் 'கியூ'வில் நிற்பவர்களை திடீர் விசாரணைக்குள்ளாக்கி கூப்பன் புத்தகத்தில் மோசடி செய்திருப்பதாக கண்டுபிடித்தால் கடும் தண்டனைக்குள்ளாவார்களென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் எச்சரிக்கை செய்தார்.

வல்வெட்டித்துறைப் பகுதியிலேயே இப்படியான ஆள் மாருட்டமோசடிகள் கூடுதலாகநடைபெறுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# பண்டாரவன்னியன் கழகத்தின் சாதனையும் செயல் திட்டமும்!

—இ. வரதராசா —

(செயலாளர், பண்டாரவன்னியன் கழகம்)

வவனியா மாவட்ட பண்டாரவன்னியன் கழகத்தின் கடந்தமூன்றுண்டு சாதனையை மதிப்பிடுவது பொருத்தமானதாகும். முன்னாள் வவனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரம் இக்கழகத்தின் போஷகராவார். முல்லைமணி வே. சுப்பிரமணியம் தலைவராகவும், இணைச்செயலாளர்களாக திரு. இ. வரதராசாவும், திரு. ப. சவரிமுத்துவும், பொருளாளராக திரு அ. கா. மகாலிங்கமும் இருக்கிறார்கள்.

0 1968 ல் 'வன்னிமா வீரன் பண்டாரவன்னியன் வரலாற்றுச் சுருக்கம்' என்னும் சிறுநூல் கழகப் போஷகர் தா. சிவசிதம்பரத்தினால் எழுதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

0 1969 ல் பண்டாரவன்னியன் உருவப்படம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

0 முல்லைமணியின் பண்டாரவன்னியன் நாடக நூல் 1970 ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் வன்னிநாட்டின் வரலாற்றுக் குறிப்பும் சேர்க்கப்பட்டுள்ளது.

0 1968ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி பண்டாரவன்னியன் நினைவுச்சிலையமைந்த கற்சிலைமடுவில் அதிவிமரிசையாக விழாக் கொண்டாடப்பட்டது. வரலாற்றறிஞர் வ. பொன்னம்பலம் வவனியா மேலதிக அரசாங்க அதிபர் ஆ. பெருமையினார் தமிழரசுப் பிரமுகர் ஜி. பி. வின்சன்ட் உட்படப்பலபிரமுகர்கள் சொற்பொழிவாற்றினர்.

0 1968ம் ஆண்டு பண்டாரவன்னியனின் நினைவு தினத்தின் காலை நிகழ்ச்சிகள் கற்சிலைமடுவில் இடம்பெற்றன. நினைவுச்சிலைக்கு மலர் அஞ்சலி, பண்டாரவன்னியன் வீரவாள் கொடியேற்றல்போன்ற நிகழ்ச்சிகளுக்குப்பின்னர் மாலை நிகழ்ச்சிகள் முல்லைத்தீவில் இடம் பெற்றன.

கழகத்தின் எதிர்காலத் திட்டம் வருமாறு:

பண்டாரவன்னியன் சிலை நிறுவுதலும் மணிமண்டபம் அமைத்தலும்.

0 வன்னிநாட்டின் வரலாற்றை ஆராய்ந்து வரலாற்று நூலாக வெளியிடுதல்,

0 வன்னிநாட்டின் பழைய இலக்கியங்களை அச்சிட்டு வெளியிடுதல் (ஈழத்துச் சிலப்பதிகாரம் எனப்போற்றப்படும் சிலம்பு கூறல், சிற்றிலக்கியங்களான கதிரையப்பர்பள்ளு, பன்றிப்பள்ளு முறிகண்டியான் சிந்து, சாலிப்பள்ளு, குருவிப்பள்ளு ஓமையந்தாதி போன்றவை)

0 வன்னிநாட்டின் பதிப்பாசிரியர்களான த. கைலாசபிள்ளை, சி. அரியகுட்டிப் பிள்ளை என்போரின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து வெளியிடுதல், ஈழத்தின் இரண்டாவது பண்டிதர் வவனியா இசாஜஐயனின் வாழ்க்கை வரலாற்றையும் சாதனைகளையும் ஆராய்ந்து வெளியிடுதல்.


## சிலோன் டொபாக்கோ கம்பனி லிமிட்டெட்

## இப்போதுள்ள விலைகள்

| ரகம் | | ஒரு சிகரெட்டுக்கு பாவனையாளர் கொடுக்கும் விலை |
|---|---|---|
| கோல்ட் பிளேக் | (சாதாரணம்) | 22 சதம் |
| கோல்ட் லீவ் | (பில்டர்) | 19 சதம் |
| மற்றர்ஹோன் | (மெந்தல் பில்டர்) | 19 சதம் |
| கப்ஸ்டன் மீடியம் | (சாதாரணம்) | 18 சதம் |
| பிரிஸ்டல் | (பில்டர்) | 16 சதம் |
| ஸ்போர்ட்ஸ்மன் | (சாதாரணம்) | 16 சதம் |
| திறி ரோஸஸ் | (சாதாரணம்) | 14 சதம் |
| பிக்கொக் | (சாதாரணம்) | 13 சதம் |
| போர் ஏசஸ் | (பில்டர்) | 12 சதம் |
| **புகையிலை வகைகள்** | | **2 அவுன்ஸ் பக்கற்** |
| றட் பிளேக் | | ரூ. 7-15 |
| ஐலன்ட் பிறைட் | | ரூ. 6-50 |

எலிபன்ட் ஹவுஸ்

அன்னசி ஜாம்

ஈழத்தின்
மிகச்சிறந்த அன்னாசியிலிருந்து
சுவைமிகு ஜாம்






இப் பத்திரிகை "[illegible]" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்தில் [illegible] அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org